Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 28 சனிக்கிழமை (12.07.2014) பக்கங்கள் 20 ஓசை -284

# வடக்கு ஆளுநரின் பதவிக்காலம் நீடிப்பு



(கொழும்பு)

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் பதவிக் காலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் மேலும் ஐந்து வருட காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று அலரி மாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அவர் வடமாகாண ஆளுநராக பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அவருடைய ஐந்து ஆண்டு பதவிக்காலம் நேற்று 2014 ஆம் ஆண்டு யூலை 11 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜீ.ஏ.சந்திரசிறி யாழ். முப்படை கட்டளைத் தளபதியாகப்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் 37 பேருக்கு விடுதலை

(யாழ்ப்பாணம்)

மன்னார் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 37 பேரையும் மன்னார் மாவட்ட நீதிபதி ஆனந்தி கனகரெட்ணம் விடுதலை செய்ய உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த மாதம் 30 ஆம் திகதி மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட 17 மீனவர்களையும் அதேபோன்று கடந்த 7 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட 20 இந்திய மீனவர்களையும் சட்டமா அதிபரின் பரிந்துரைக்கு அமைவாக நேற்று மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நகரில் உலாவருகிறது போலி அமெரிக்க டொலர்கள்

(யாழ்ப்பாணம்)

ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பண நோட்டுக்களை இலங்கை ரூபாவாக மாற்றுவதற்காக தம்வசம் வைத்திருந்த நால்வர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களிடமிருந்து டொலர் நோட்டுக்கள் மீட்கப்பட்டதாகவும், அவ்வாறு மீட்கப்பட்ட டொலர் நாணயத்தாள்கள் போலியானவை என யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேன தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் தவறான சாட்சியம் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்

அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

கடந்த 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ். அரியாலைப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்பாக வழங்கப்பட்டிருக்கும் தவறான சாட்சியம் தொடர்பாக குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு வழங்க முடியுமா என்று அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்மூலமாகவே உண்மை நிலை வெளியே வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் இந்த வாரம் நடைபெற்ற காணாமற்போனோர் தொடர்பான விசாரணைக்குழுவின் விசாரணையின் போது எமது கட்சியைக் குறிப்பிட்டு பெண்ணொருவர் கூறிய கருத்துக்கள் எமக்கு வேதனையளிக்கின்றது.

2006 ஆம் ஆண்டு அரியாலைப் பிரதேசத்தில் அப்பெண்மணி வசித்து வந்ததாகவும், அப்போது வெள்ளைவானில் வந்த இனந்தெரியாதோர் தனது கணவரை கடத்திச் சென்றதாகவும் தெரிவித்திருந்தார்.

அப்போது ஆணைக்குழுவினர் அந்தப் பெண்மணியிடம் உங்கள் கணவர் கடத்தப்பட்ட,

19 ஆம் பக்கம் பார்க்க

## மயிலிட்டி இந்து ஆலயங்களில் வழிபாடு செய்ய நேற்று அனுமதி



(யாழ்ப்பாணம்)

மயிலிட்டியில் உள்ள மூன்று இந்து ஆலயங்களில் வழிபாடு நடத்துவதற்கு பொதுமக்களுக்கு நேற்று படையினர் அனுமதி வழங்கினர்.

வலி.வடக்கு இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள மயிலிட்டி நாகதேவன் துறையில் அமைந்துள்ள மூன்று இந்து ஆலயங்களுக்குச் செல்ல இராணுவத்தினர் அனுமதி வழங்கியமையால் நேற்று ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் அந்த ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டுவிட்டுத் திரும்பினர்.

30 வருடங்களின் பின்னர் நேற்று அந்த ஆலயங்களுக்குச் சென்ற பொதுமக்கள் வழிபாட்டில் ஈடுபட்டனர். காலையில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்கு அருகில் உள்ள இராணுவத்தினரின் சோதனைச் சாவடியில் ஆலயத்துக்குச் செல்லும் பொதுமக்கள் சோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர்.

19 ஆம் பக்கம் பார்க்க


## ஊவா மாகாணசபை கலைப்பு?

(கொழும்பு)

ஊவா மாகாணசபையை நேற்று நள்ளிரவுடன் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம் நேற்று முன்னிரவு தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஊவா மாகாண முதலமைச்சர் சசேந்திர ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் ஊவா மாகாண சபையை கலைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக ஆளுநர் சீ.நந்த மெத்யூ அறிவித்துள்ளார்.

## நயினையில் கரைபுரண்டது பக்தர்கள் வெள்ளம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்றுக் காலை 9.00 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 28 ஆம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமானது.

19 ஆம் பக்கம் பார்க்க

## டில்லியில் ஜீ.எல்.பீரிஸ் சுஷ்மாவுடன் பேச்சு



(புதுடில்லி)

இந்தியாவிற்கு மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்து உரையாடினார்.

அச்சமயம், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இலங்கைக்கு வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளை உத்தியோகபூர்வமாக அவர் முன்வைத்தார். இந்தியாவின் புதிய பிரதமராக மோடி பதவியேற்ற பின்னர் இரு

19 ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழுவின் ஆயுட்காலம் நீடிப்பு

(கொழும்பு)

தமிழர்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வை எட்டும் நோக்கில் அமைகப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஆயுட்காலம் மேலும நீடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இதுவரை இணைந்துகொள்ளாத நாடாளுமன்றத்தில் ஆசனங்களை கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் இந்த தெரிவுக்குழுவில் இணைந்து கொள்வதற்கு வசதியாகவும், இனப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காணும் முயற்சியை மீண்டும் வலுவூட்டும் நோக்கிலேயே இந்த காலநீடிப்பு செய்யப்பட்டிருக்கிறது.

எனினும் இந்த கால நீடிப்பு சர்வதேசத்துக்காக மாத்திரமே

19 ஆம் பக்கம் பார்க்க

# பிறந்து இரண்டே நாளான சிசுவை விற்க முயன்ற இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

பிறந்து இரண்டு நாளே ஆன பெண் சிசுவைக் கடத்தி விற்க முயன்ற இருவர் யாழ்.பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகில் வைத்து யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.


கடந்த 3ஆம் திகதி பிறந்து இரண்டு நாளான பெண் சிசுவைப் பெற்ற தாய் விற்றுள்ளார். இக்குழந்தையை வாங்கிய சாவற்கட்டைச் சேர்ந்த இருவர் குறித்து பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து சிசுவைக் கடத்திச் சென்ற வேளையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு சிசுவை விற்ற தாய் தலைமறைவாகியுள்ளதாகவும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# தமிழ்த் தேசியம் கூறும் தலைவர்களால் ஏமாற்றப்படுவதை புரிந்து கொள்ளுங்கள்

## ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் தெரிவிப்பு





(சரசாலை)

தமிழ் இனம் பல தடவை இலங்கை அரசினால் ஏமாற்றப்பட்டுள்ளது என்பதை விட தமிழ்த் தேசியம் கூறும் தலைவர்களால் தான் அதிகம் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மக்களாகிய நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, இவ்வாறானவர்களை தூக்கி எறிவதன் மூலமே தமிழர்களுக்கான வாழ்வியலை வென்றெடுக்க முடியும் என அமைச்சரின் ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி. குகேந்திரன் (ஜெகன்) தெரிவித்தார்.

சரசாலை வடக்கு கிராம மக்களின் குறை நிறைகளை ஆராய்ந்து அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் தொடர்பான சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களது ஏகத் தமிழர்கள் எனக் கூறுபவர்கள் வேண்டும் என்றே உங்களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றார்கள். இனி வரும் நாளில் நீங்கள் சிந்திக்கும் ஒவ்வொரு நிமிடமும் அரசியலைப் பிழைப்புக்காக நடத்துபவர்களுக்கு முடிவு கட்டுவதாக இருக்க வேண்டும்.

ஒட்டுமொத்த அரசியல் பலத்தையும் நீங்கள் எமக்குத் தருவீர்களானால் அரசியலுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தர நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றி நான்கு ஆண்டுகள் முடிந்துவிட்டது. ஆட்சி நடத்தும் கூட்டமைப்பினர் திரும்பிப் பார்ப்பதில்லை என மக்களாகிய நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால், தேர்தல் காலத்தில் அவர்கள் வந்து கூறுபவற்றை நம்பி அவர்களுக்கு வாக்களிக்கின்றீர்கள். இச் செயற்பாடுகளால் தான் நீங்கள் வாழ்வியலில் முன்னேற முடியாது தவிர்க்கின்றீர்கள். ஜதார்த்தமான அரசியல் நகர்வுகளை ஏற்கக் கூடிய நிலைக்கு மக்கள் அனைவரும் வரவேண்டும். மக்களின் தற்கால நிலையை உணர்ந்து அரசியல் நகர்வுகளை மேற்கொண்டு வருபவர் தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

இராணுவத்தை வெளியேற்றுவோம் எனக் கோஷமிட்டு வடமாகாண சபை ஆட்சியைப் பிடித்தவர்கள் இன்றுவரை ஒரு இராணுவத்தைக் கூட விலக்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் உங்களால் ஒரு சிறு அரசியல் பலத்தை பெற்ற நாங்கள் உங்கள் வாழ்வை மேம்படுத்தி வருகின்றோம்.

வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதென்பது சாத்தியமற்ற விடயம். இருந்தும் அவர்களைப் படிப்படியாகத் தான் வெளியேற்ற வேண்டும். இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் சாணக்கியமான அரசியல் நகர்வுகளால் தான் இராணுவத்தை ஒருசில பகுதிகளுக்குள் முடக்கி வைக்க முடிந்துள்ளது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

இந்தச் சந்திப்பில் தென்மராட்சி அமைப்பாளர் சாள்ஸ், அமீன், செந்தூரன் ஆகியோருடன் அப்பகுதி மக்களும் கலந்து கொண்டனர்.

# 25 பாடசாலைகளில் 'மகிழ்ச்சி துக்கம்' பெட்டிகள்



(யாழ்ப்பாணம்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலைகளில் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக பாடசாலை சிறுவர் பாதுகாப்பு குழுவை அமைக்கும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 25 பாடசாலைகளில மகிழ்ச்சி, துக்கம் எனும் பெட்டிகள் வைக்கும் திட்டம் நேற்று நடைமுறைப் படுத்தப்பட்டது.

இந் நிகழ்வு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் என். கௌரிதாசன் தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 25 பாடசால்லைகளின் அதிபர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பாடசாலைகளில் வைக்கப்படவுள்ள மகிழ்ச்சி துக்கம் எனும் இந்தப் பெட்டியில் மாணவர்கள் தாம் எதிர்கொள்ளும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை இட முடியும்.

மாதத்தில் இறுதி வெள்ளிக்கிழமை நாள் மாவட்ட செயலகத்தின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்களும் பாடசாலையில் சிறுவர் விவகாரத்திற்கு பொறுப்பான ஆசிரியரும், மாணவர் பிரதிநிதியும் இணைந்து இந்த முறைப்பாட்டுப் பெட்டியை திறந்து பார்ப்பார்கள்.

எனவே மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு அவர்கள் தீர்வுகளை முன்வைப்பார்கள். (90)

**காணி விற்பனைக்கு**

மஞ்சுளா பேக்கரி சந்தி, திருநகர், கிளிநொச்சியில் 1/4 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு

தொடர்புக்கு : 0770334147 கேதீஸ்வரன் (ஈசன்) (C/3740)

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் நான்கு இந்திய மீனவர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளுடன் நான்கு இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு யாழ்.கடற்றொழிழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை கச்சதீவுப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சமயம் இயந்திரக் கோளாறு காரணமாகவும், எரிபொருள் தீர்ந்தமையாலும் இந்தப் படகு நான்கு இந்திய மீனவர்களுடன் நெடுந்தீவு கடற்பரப்பில் கரையொதுங்கியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் கரையொதுங்கிய படகை வழிமறித்த இலங்கை கடற்படையினர் 35 லீற்றர் டீசலைக் கொடுத்து திரும்பிச் செல்லுமாறு கூறியதாக பி.முருகன் என்ற இந்திய மீனவர் தெரிவித்தார்.

எனினும் இயந்திரக் கோளாறைச் சரிசெய்ய முடியாததினால் படகு மேலும் கரையொதுங்கி நெடுந்தீவை அண்மித்ததாகவும், அவ்வேளை படகையும், தம்மையும் எல்லை இலங்கைக் கடற்படையினர் பிடித்து யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுக்காலை யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திற்கு அழைத்து வரப்பட்ட இந்திய மீனவர்கள் மீது நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதாக யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1073 | திகதி 10.07.2014

வெற்றி எண்கள்: 21 23 31 47 | ஆங்கில எழுத்து: Y

ஜக்பொட் பரிசு ரூ. 3,32,11,440/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,32,11,440/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | ரூ. 6,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 272 | 1,000/= | ரூ. 2,72,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 467 | 1,000/= | ரூ. 4,67,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11813 | 60/= | ரூ. 7,08,780/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6292 | 40/= | ரூ. 2,51,680/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 156570 | 20/= | ரூ. 31,31,400/= |
| ஆங்கில எழுத்து | 22703 | 20/= | ரூ. 4,54,060/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 68,84,920/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 33,517,580/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.07.14 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3733)

**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

021 222 8680, 077 592 5088. (C/3395)

# உதைபந்தாட்டம்

(முகமாலை)

முகமாலை இளந்தென்றல் சனசமூக நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நாளை பளை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பளையில் உள்ள நான்கு கழகங்கள் மோதவுள்ளன. வெற்றி பெறும் கழகத்துக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (37)

# நோய்த்தாக்கங்களுக்கு உள்ளாகும் சிறுபோக வெங்காயச் செய்கை

## வலிகாமம் விவசாயிகள் கவலை

(வலிகாமம்)

வலிகாமம் பகுதியில் விவசாயிகளால் செய்கை பண்ணப்பட்ட சிறுபோக வெங்காயப் பயிர்கள் நோய்த் தாக்கத்துடன் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

வலிகாமம் பகுதிகளில் உள்ள தோட்ட நிலங்களில் பயிர் செய்யப்பட்ட வெங்காயப் பயிர்கள் பழுத்து கருகி ஒருவித நோய்த்தாக்கத்துடன் காணப்படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடன்களைப் பெற்று விவசாயத்தில் ஈடுபட்ட விவசாயிகள் தமது முதல் கூடக் கிடைக்காத அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடுமோ என அச்சமடைந்துள்ளனர்.

இதனால் தமது பயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் விவசாயத்தில் போட்ட முதலைப் பெற்றுக்கொள்வதற்குமாக விலையுயர்ந்த கிருமி நாசினிகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனாலும் இவ்வாறு பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகள் விவசாயிகளுக்கு பயனளிப்பதாக தெரியவில்லை எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த நோய்த்தாக்கத்தைக் கட்டுப்படுத்த விவசாய அமைப்புக்கள் முன்வர வேண்டுமெனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# சிறப்பாக நடைபெற்ற வேட்டைத்திருவிழா

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த வேட்டைத் திருவிழா வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இவ் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து கடந்த புதன்கிழமை வேட்டைத்திருவிழா நடைபெற்றது.

இலங்கையில் உள்ள தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இரண்டு ஆலயங்களில் ஒன்றான ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் விசேடமாக வேட்டைத் திருவிழா வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது. இவ் ஆலயத்தில் விநோதமான முறையில் ஆயிரக்கணக்கான அடியார்கள் எம் பெருமானோடு வேடுவர்களாக காட்டுக்குச் சென்று தங்கள் ஆடைகளாக இலைகுழைகளை அணிந்து உடம்பில் கரிகளைப் பூசி தேன் வேட்டை ஆடி வருவது வழக்கம்.

இந்த ஆலயத்திற்கு தானாக தோன்றியதால் தான்தோன்றீஸ்வரர் எனவும் வேகாமன் இருந்ததால் வேகாவனப் பெருமான் எனவும் இரண்டு காரணப் பெயர்கள் உண்டு. இவ் ஆலயத்தின் பூசைகளை ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ ந.இராஜாராம் குருக்கள் மேற்கொண்டுவருகின்றார். இன்று தீர்த்த உற்சவத்துடன் திருவிழா நிறைவு பெறும். (40)

# 50 ஆவது ஆண்டு நிறைவும் பொன்விழா நிகழ்வும்



முல்லைத்தீவு மாவட்டம், மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட வவுனிக்குளம் கிராமத்தின் பாலிநகர் மகா வித்தியாலயத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பொன் விழா நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாந்தை கிழக்கு பிரதேச அபிவிருத்திக் குழுத்தலைவருமான சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட ஹுனைஸ் பாரூக் இப்பாடசாலையில் சாதனை படைத்த மாணவர்களுக்கு பதக்கங்களையும் அரச ஊழியர்களாகக் கடமையாற்றும் பழைய மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களையும் வழங்கிவைத்தார்.

கல்லூரியின் அதிபர் திருமதி யோ.தில்லைநாதன் பிரதம அதிதிக்கு நினைவுச் சின்னத்தையும் பொன்விழா சிறப்பு மலரையும் வழங்கிவைத்தார். (70)

# வெற்றுக்காணிக்குள் கழிவுகள் சிரமத்துக்குள்ளாகும் மக்கள்

பருத்தித்துறை வீதி புத்தூர் மேற்கில் உள்ள வெற்றுக்காணிக்குள் பைகளில் கட்டியும் தனியாகவும் வீட்டில் சேரும் கழிவுகளைக் கொட்டுவதால் அப்பகுதி சுகாதாரமற்ற நிலையில் காணப்படுவதாகவும் இதனால் இந்தக் காணியை அண்டியுள்ள குடியிருப்பாளர்கள் பல்வேறு அசௌகரியங்களைத் தாம் எதிர்கொள்வதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் தொற்றுநோய்கள் பரவும் ஏது நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கும் அப்பகுதி மக்கள் வெற்றுப்போத்தல்கள் பேணிகளை வீசுவதால் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இப்பகுதிகளில் கழிவுகளை வீசுவதைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தக் காணியை அண்டியுள்ள பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# தமிழ்க்குடியின் தனிக்குணம்!!




**என்ன்தான் அரசாங்கத்தைச் சிலபேர் குறை குறையாகச் சொன்னாலும் அது செய்திருக்கிற ஆயிரம் நல்ல காரியங்களை ஆரும் மறுக்கேலாது.**

**ஆனால், இந்த நல்ல காரியங்களை எங்கட தமிழ்க்கண்களுக்கும் தெரியாது. தமிழ் மனசும் பாக்காது. ஏனெண்டால் தமிழ் மனசும் தமிழ்க்கண்ணும் ஊனம் விழுந்ததொண்டு.**

அதால தனக்குப் பிடிக்காதவை நல்லதாக எதைச் செய்தாலும், எவ்வளவைச் செய்தாலும் அதையெல்லாம் அது ஒரு போதுமே ஏற்றுக்கொள்ளாது.

இது ஒரு பேய்க்குணம்தான் எண்டு தெரிஞ்சாலும் இதை அது ஒருபோதுமே திருத்திக்கொள்ளாது.

இப்ப பாருங்கோ, இந்தப் போர் முடிஞ்ச பிறகு எவ்வளவு நல்ல காரியங்கள் நடந்திருக்குது எண்டு.....

இதை ஒவ்வொண்டாய் ஒருக்கால் பாப்பம்.

**இப்ப சாவு எண்டது இல்லை.**

முந்தியெண்டால் நித்தமும் மரண கண்டம்தான். எப்ப என்ன நடக்கும் எண்டு ஆருக்கும் தெரியாது? அவன் வருவானா? இவன் வருவானா எண்டு தெரியாமல், செத்துச் செத்துப் பிழைக்க வேண்டியிருந்தது. வீடுக்க இருந்தாலும் யமன் வந்து படலையைத் தட்டிக்கொண்டிருப்பான். வளர்ந்த பிள்ளைகளை வீட்டில வைச்சிருக்கிறதெண்டதே பெரிய பிரச்சினையும் பெருங்கலக்கமும்.

**இப்ப அந்தப் பயமே இல்லை. இது ஒரு பெரிய விசயமில்லையோ...!**

அவ்வளவு ஏன்... சண்டை நிண்டு அஞ்சு வருசமாச்சு. இந்த அஞ்சு வருசமும் சண்டை தொடர்ந்து நடந்திருந்தால் எங்கட சாவுக்கணக்கில இப்ப எவ்வளவு தொகை கூடியிருக்கும் எண்டத நினைச்சுப் பாத்தால் குலைநடுங்கேல்லயோ?...

இப்ப சாவுகள் இல்லை எண்டு ஆனதில சந்தோசப்படாமல் இருக்கிறவை ஆராயிருக்கும்..

முந்தி, ஒரு இடத்துக்கு ஒழுங்காப் போய் வர ஏலாது. வழிக்கு வழி சோதனையும் ஏத்தி இறக்கிறதுமாக ஒரே அமர்க்களமாக இருக்கும். யாழ்ப்பாணத்தில இருந்து கொழும்புக்குப் போறதெண்டால் ஒரு மாசப்பயணம். ஒரு தொகை காசும் செலவாகும். வன்னியில இருந்து வெளிக்கிடவே ஏலாது.

**இப்ப ஒரு இரவிலேயே கொழும்புக்குப்போய், அடுத்த இரவு வீட்டில வந்து இடியப்பம் சாப்பிடலாம். வன்னியில எண்டாலும் அப்பிடித்தான். எந்த நேரத்திலயும் எங்கயும் போகலாம் வரலாம். ஆரும் மறிக்க ஏலாது.**

முந்தி ஆமிக்காரனைக் கண்டாலும் பயம். காணாவிட்டாலும் பயம்.

**இப்ப ஆமிக்காரன் மறிச்சாலும் நிக்காமல் போற பெடியள்தான் கூடுதல். அந்த அளவுக்கு பல்லுப்பிடுங்கின பாம்புக்கணக்கிலதான் ஆமிக்காரர் எல்லாம்.**

முந்தி ஊர்களை விட்டு இடம்பெயர்ந்து கொண்டேயிருக்கவேணும். எப்ப குண்டு வீச்சு விமானங்கள் வரும்? எப்ப ஷெல் வந்து விழும்? எண்ட கலக்கம்.

**இப்ப ஊர்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிற காலம். விட்டிட்டு ஓடின ஆக்களெல்லாம் திரும்பி ஊர்களுக்கு வந்து தங்கட வீடு வளவுகளைத் திருத்திக் குடியிருக்கிற காலம்.**

முந்தி வீடுகளும் கடை தெருக்களும் காடாய்ப்போன காலம். கற்குவியலாகிப்போன கோலம்.

**இப்ப ஊர்களும் கடை தெருக்களும் மாடி மனைகளாகிற காலம். நகரமோ போடுது புதுக்கோலம்.**

முந்தி குண்டும் குழியுமான தெருக்கள். பாவஞ்செய்தவனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையைப் போல விழுந்தெழும்பித்தான் அடுத்த வீட்டுக்கே போகவேணும்.

**இப்ப காப்பெற் றோட்டில கண்ணை மூடிக்கொண்டு போகக்கூடியமாதிரி மாற்றம்.**

முந்தி, கியூவில நிண்டால்தான் வாழ்க்கை.

**இப்ப கியூ எண்டால் என்ன எண்டு தெரியாத வாழ்க்கை.**

முந்தி இருட்டும் புழுதியுமே வடக்கின்ரை அடையாளம்.

**இப்ப வெளிச்சத்தில ஊரெல்லாம் செழிக்குது. நம்பவே முடியாத அளவுக்கு குச்சொழுங்கைக்கும் கரண்ட் போயிருக்கு.**

முந்தி முதுகு முறியப் பிள்ளைகள் மண்ணில இருந்துதான் படிக்க வேணும். மழை பெய்தால் பள்ளிப் பிள்ளையும் நனையோணும்.

**இப்ப மாடிப்பள்ளிக்கூடங்கள்தான் ஊர் முழுக்க. மண்ணில இருந்த காலம் ஒண்டு இருந்ததா எண்டு கேட்கிற காலம் ஒண்டு வந்திருக்கு.**

இப்பிடி ஆயிரம் விசயங்களைச் சொல்லிக்கொண்டு போகலாம்.

வாய்க்கால்கள் வெட்டப்பட்டு, குளங்கள் தூர் எடுக்கப்பட்டு, பாலங்கள் கட்டப்பட்டு, வீட்டுத்திட்டங்கள் கொடுக்கப்பட்டு, வாழ்வாதார உதவிகள் செய்யப்பட்டு....

இப்பிடியே எவ்வளவோ நல்ல காரியங்கள் நடந்திருக்கு.

ஆனால், வாயைத்திறந்தால் புறணியும் திட்டும் சொல்லிற தமிழர்கள் இன்னும் குருடர்களாகவும் செவிடர்களாகவும் மனநோயாளிகளாகவும் தானிருக்கினம்.

என்ன செய்யிறது, தமிழ்க்குணத்தின்ரை விசேசம் அப்பிடி

அது ஒருநாளும் ஒருதரையும் நம்பாது.. ஒண்டையும் நல்லாய்ச் சொல்லாது.. ஒண்டையும் ஏற்றுக்கொள்ளாது.

வாழ்க தமிழ்க்குடியும் தமிழ்க்குணமும்.

இந்த உலகத்தை கெடுப்பது கெட்டவர்கள் அல்ல கைகட்டி வேடிக்கை பார்க்கும் நல்லவர்கள்தான். -மாவீரன் நெப்போலியன்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## விளையாட்டின்றி வளரும் குழந்தைகள்!

கூடி விளையாடு பாப்பா என்கிறான் பாரதி. இன்று பெரும்பாலான குழந்தைகள் பெரியவர்களின் கட்டுப்பாடுகளுடன் வீட்டுக்குள்ளேயே தனிமையில் தனக்குத் தானே பேசிக்கொண்டு தனக்குத் தானே. விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் விழுந்து விழுந்து படிப்பதைத் தவிர வேறு எந்த சமூகச் செயற்பாடுகளுமின்றி நண்பர்களுடன் விளையாட்டின்றி தனிமையில் வளரும் குழந்தைகளின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

கூடி வாழ்தல் என்பது இயற்கையின் உள்ளுணர்வினால் விளைந்தது. அது தங்களை இந்த பூமியில் வாழத் தகுதியானவர்களாக்குகிற இயற்கை வாழ்முறை. அது உளவியல் ரீதியாக சமூகத்தின் அங்கத்தினரான ஒவ்வொருவரையும் பண்படுத்துகிறது.

அதற்கு குழந்தைப்பருவத்திலேயே சமூகம் கண்ட வழிமுறை தான் விளையாட்டு. கூடி விளையாடும் விளையாட்டுகளில் குழந்தையின் மனம் களிப்புறுகிறது. விளையாடுவதிலுள்ள மகிழ்ச்சிக்காக விளையாடும்போதே, ஆரோக்கியத்திற்குத் தேவையான உடற்பயிற்சியாகவும் அது அமைந்துவிடுகிறது.

புறஉலகின் எல்லா நெருக்கடிகளிலிருந்தும், பெற்றோர்களின், ஆசிரியர்களின், வீட்டுப்பாடச் சுமையின், பரீட்சைப் புள்ளிகள் பூதங்களிலிருந்து விடுபட்டு தங்களுடைய இயல்பான படைப்பூக்க உணர்வை மீட்டெடுக்கவே குழந்தைகள் விளையாடுவதற்கு பேராவல் கொள்கின்றனர்.

சமூகத்தில் இயைந்து வாழ விளையாட்டு அவர்களை பண்படுத்துகிறது. தன் வயதொத்த குழந்தைகளோடு கூடி விளையாடும் போது கூட்டுச்செயலுக்கான விவேகமும், கூட்டுணர்வும் ஏற்படுகிறது.

தலைமைப் பண்பும், இந்தத் தலைமைப்பண்பின் தனித்தகுதியாக எதிர்பாராத சூழ்நிலைகளை எதிர்கொள்கிற திறனும் வளர்கிறது. பரஸ்பரம் விட்டுக்கொடுப்பதால், அன்பும், நட்பும் பெருகித் தழைக்கிறது. விளையாட்டுச் சண்டை என்பது விளையாட்டுச் சண்டையாகவே முடிந்து விடுகிறது.

குழந்தைகளால் நீண்ட நேரத்திற்கு கோபத்தையும், வெறுப்பையும், கசப்பையும் வளர்க்க முடியாது. யார் பக்கம் நியாயம் என்று தர்க்கரீதியாக யோசிக்காமல் யார் அதிகமாகப் புண்பட்டிருக்கிறார்களோ, யார் அதிகம் வருத்தமடைந்திருக்கிறார்களோ அவர்களுக்காக விட்டுக்கொடுப்பார்கள். இந்த விட்டுக்கொடுத்து இயைந்து வாழ்கிற பண்பு விளையாட்டின் மூலமே கிடைக்கிறது.

இன்று அவர்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கிற வீடியோ, கம்ப்யூட்டர் விளையாட்டுகள், தன்னையொத்த இன்னொரு குழந்தையோடு விளையாடுவதைத் தடுக்கின்றன. கார் ரேஸ், வேட்டையாடுதல், பைக் ஓட்டுதல் போன்ற குழந்தையின் வயதுக்கும், மனநிலைக்கும், யதார்த்தத்திற்கும் சற்றும் சம்பந்தமில்லாத வீடியோ விளையாட்டுகள்.

அதில் எந்தக் கூட்டுச் செயற்பாடும் இல்லை. விட்டுக்கொடுத்தல் இல்லை. தலைமைப்பண்பு தேவையில்லை. அன்போ, நட்போ, பாசமோ, தேவையில்லை. அதிலே ஒரே குறிதான். வெற்றிபெற வேண்டும் நிறைய புள்ளிகள் எடுக்கவேண்டும்.

தனிமையில் விளையாடும் இந்த விளையாட்டு குழந்தையிடம் பிடிவாதத்தை வளர்க்கிறது. தான் என்கிற வெறியை கிளப்புகிறது. வெற்றி பெறுவதற்காக எதையும் செய்யலாம் என்ற எண்ணத்தை வளர்க்கிறது.

என்ன மாதிரியான எதிர்கால சமூகத்தை உருவாக்கப் போகிறோம்? குழந்தைகள் கூடி விளையாடுவதற்கான தருணங்களே இல்லாமல் ஆகிவிட்டது. வெறிச்சோடிக் கிடக்கின்றன தெருக்கள். குழந்தைகளின் குரலுக்காக ஏங்கித் தவிக்கின்றன சூரியனும் நிலாவும்.

ஆனால் குழந்தைகள் வீடுகளுக்குள் எப்போதும் அலறும் முட்டாள் பெட்டிகளின் முன்னேயோ, பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்களில் தலையைக் கவிழ்த்தோ வதைபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

சமூகத்தின் கூட்டுச்செயற்பாட்டின் ஆதாரமான, தார்மீக நெறிகளைப் பயிலாமலே ஒரு எதிர்கால சமூகம் வளர்ந்தால் என்ன ஆகும்? யோசிக்க வேண்டும்.

- ஆசிரியர்

# 2005 - 2012 காலப்பகுதியில்

# 260 மதுபானசாலைகளுக்கு அனுமதி

(கொழும்பு)

கடந்த 2005 ஆம் ஆண்டு முதல 2012 ஆம் ஆண்டு வரையான ஏழு வருட காலப்பகுதியில் 260 புதிய மதுபானசாலைகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மதுபானசாலைகளுக்கான புதுய அனுமதி தொடர்பாக நாடாளுமன்றில் ஐ.தே.க. எம்.பி. ஹரிசன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2005 இல் 35, 2006 இல் 42, 2007 இல் 36, 2008 இல் 40, 2009 இல் 51, 2010 இல் 41, 2011 மற்றும் 2012 இல் 55 என அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் 1994 தொடக்கம் 2012 வரையான 18 வருட காலப்பகுதியில் புதிய மதுபான நிலையங்கள் அமைக்க 2963 அனுமதி வழங்கப்பட்டதுடன், இதற்கு மேலதிகமாக ஹோட்டல் மற்றும் சுப்பமாக்கற்றுக்களில் மதுபான நிலையங்கள் அமைக்க 432 அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

எனவே, 1994 தொடக்கம் 2012 வரையான காலப்பகுதிக்குரிய மதுபானசாலைகளின் அனுமதியுடன் ஒப்பிடுமிடத்து 2005 முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், புதிய மதுபானசாலைகளுக்கான அனுமதி வழங்கப்பட்டமையானது பெருமளவில் குறைவடைந்துள்ளது.

அத்துடன் தற்போது சுப்பமாக்கற்றுக்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளதுடன், ஹோட்டலகளுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிற்போடப்பட்டது மொழிபெயர்ப்பு பரீட்சை

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி இடம்பெறவிருந்த மொழிபெயர்ப்பு கற்கைநெறிக்கான தகுதிகாண் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத காரணத்தால் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக பதி[illegible] கையொப்பமிடப்பட்டு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் 13 ஆம் திகதி பரீட்சைக்கு [illegible] அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் அடுத்த பரீட்சை [illegible] தினம் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதித் தேர்தலை நடாத்த சரியான தருணம் இதுவே

## என்கிறார் அத்துரலிய

நாட்டை சரியான வழியை நோக்கி திருப்ப சிறந்த பின்னணியை உருவாக்கும் என்பதன் காரணமாக ஜனாதிபதித் தேர்தல் ஒன்று இந்தச் சந்தர்ப்பத்தில் நடத்தப்படுவது சிறந்தது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட பிரதிநிதிகளை சந்தித்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்திற்காக தான் தயாரித்துள்ள கொள்கைகள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியுடன் கலந்துரையாடியதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தக் கொள்கைகள் குறித்து ஜே.வி.பி உட்பட இடதுசாரி கட்சிளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் பெருமளவில் வெற்றியளித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையானது தேசிய விவாதங்களுக்கு சிறந்த பிரவேசத்தை பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் அத்துரலியே ரத்ன தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# பொதுநலவாய பேருந்துகளின் கொள்வனவில் முறைகேடு

## விசாரிக்க அரசு இணக்கம்

இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெற்றபோது நிதி முறைகேடுகள் இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் இணங்கியுள்ளது.

குறித்த மாநாட்டின்போது சொகுசு பேருந்துகளை கொள்வனவு செய்ததன் மூலம் இந்த முறைகேடுகள் இடம்பெற்றதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குற்றம் சுமத்தியிருக்கிறார்.

சீன நிறுவனம் ஒன்றிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட இந்தப் பேருந்துகள் 20 வீத அதிகரித்த பெறுமதி குறிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டதாக கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது பதில் அளித்த பிரதி நிதியமைச்சர் சரத் அமுனுகம, உரிய ஆவணங்களை சமர்ப்பித்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதியளித்தார்.

இந்த முறைகேட்டின்போது 100 பேருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு அதில் 5 பேருந்துகள் ஜனாதிபதி செயலகத்துக்கு வழங்கப்பட்டதாக ரவி கருணாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஒருவார குற்றச்செயல்களில் குடாநாட்டில் 268பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த ஒருவாரத்தில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்செயல்களின் பேரில் 268 பேர் கைது செய்யப்பட்டதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.விமலசேன தெரிவித்தார்.

நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் பிரிவில் கொலைக்குற்றத்திற்காக ஒருவரும், கடத்தல் குற்றத்திற்காக இருவரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒருவரும், பிறரை அடித்துக் காயப்படுத்திய 48 பேரும், சட்டவிரோத மதுவிற்பனை செய்த 21 பேரும் சந்தேகத்தின் பேரில் 26 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 17 பேரும், வீதி விபத்துக்களினால் நால்வரும், சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவித்த ஒருவரும், களவு தொடர்பில் 6 பேரும், குடித்துவிட்டு கலகம் விளைவித்த மூவரும், கலகம் விளைவித்த ஒருவரும், சட்டவிரோதமாக மின் இணைப்பு பெற்ற 10 பேரும், கவனயீனமாக மாடுகளை ஏற்றிய ஒருவரும், அத்துமீறி வீட்டினுள் நுழைந்து சேதம் விளைவித்த ஒருவரும், சிறுவர் இல்லத்திலிருந்து தப்பிய ஒருவரும், ஏனைய குற்றத்திற்காக நால்வரும், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பாரிய குற்றச்செயல்களில் ஈடுபட்ட 8 பேரும், சட்டவிரோத மது விற்ற 16 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 20 பேரும், சந்தேகத்தின் பேரில் 14 பேரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய மூவரும், ஏனைய குற்றங்களுக்காக 57 பேரும் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, மல்லாகம் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார்.

(இ)

# பாடறிந்து ஒழுகும் பண்பாடு

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பது ஔவைப் பாட்டியின் வாக்கு, எல்லா உயிரினங்களிலும் மானிடப் பிறவியே உயர்ந்தது. ஏனெனில் மனிதனில் மட்டுமே பகுத்தறிவு காணப்படுவதுடன் அறிவு, ஆற்றல் ஆக்கத்திறன், ஆவல், சிந்தனை, உயர்வுள்ளல் போன்றன அடங்கியுள்ளன.

இதனால் தான் மனிதன் வாழ்விலே வளர்ச்சியடைய, மேன்மையடைய, புகழ் பெற முடிகிறது. மனித சமுதாயத்தினுடைய மேன்மை அதன் மாற்றத்தில் வளர்ச்சியில் இருக்கின்றது. ஒரு சமுதாயத்தினுடைய வளர்ச்சியினை அதன் பண்பாட்டின் [Culture] நிலையிலிருந்து அறியலாம். ஒவ்வொரு சமூகத்தின் பண்பாடும் ஒரு நாகரிகமாக [Civilization] வெளிப்படுகின்றது.

பண்பட்டு வருவது பண்பாடு ஆகும். ஆரம்பத்தில் பண்பாடு பண்படுத்தல் என்னும் பொருளிலேயே கையாளப்பட்டது. நிலம் பண்பட பண்பட நல்ல விளைச்சல் கிடைப்பது போல ஒரு சமுதாயம் நற்பண்புகளில் பண்பட பண்பட சமுதாயத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலைத்து நிற்கும்.

இவ்வாறான பண்பாடானது மக்களின் வாழ்க்கை முறையிலும் மனித உறவுகளிலும் வெளிப்பட்டு நிற்பதனைக் காணலாம். பண்பாடென்பது தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த முறையில் கற்றுணர்ந்த நடத்தை முறைகளை குறிப்பிடுகின்றது.

மனிதன் பிறந்த நாள் தொடக்கம் இறக்கும் நாள் வரை அவனது பண்பாட்டை சமுதாய வயமாக்கம் [Socialization], பண்பாட்டு வயமாக்கம் மூலம் கற்கின்றான். கற்பிக்கும் நிறுவனமாக பெற்றோர்களோ,

**பிறரை வேதனைப் படுத்தாதிருப்பதும், பிறரது வேதனையை நமது உள்ளத்தில் தேடி அறிந்து அதனை மாற்ற முயல்வதும் சிறந்த பண்பாட்டில் அடங்கும்.**


குடும்பங்களோ, ஒப்பார் குழுக்களோ [Peer groups] பிற நிறுவனங்களோ காணப்படுகின்றன.

பண்பாடென்ற சொல்லை இன்னது தான் என சுட்டி வரையறுக்க முடியாதுள்ளது. ஏனெனில் பண்பாடு எனும் கருத்தாக்கம் மக்களின் அறிவு சார்ந்த நிலையில் ஏற்படும் எண்ணற்ற கருத்து வடிவங்களின் [Abstraction] படிநிலைகள் மூலம் வெளிப்படுவதேயாகும்.

பண்பாடு என்றால் என்ன? என்பது பற்றிய பல்வேறு அறிஞர்கள் தத்தமது கருத்துக்களை விளக்கியுள்ளனர். இதனைக் குரோபரும் குளுக்கானும் எழுதிய "Culture : A Critical Review of Concepts and Definitions" எனும் நூலில் காணலாம். இங்கே 160இற்கும் மேற்பட்ட வரையறைகள் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில வருமாறு:-

- பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயற்படும் போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது.
- பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்ட கருத்துக்களும் சமுதாய மரபுரிமையாக பெறப்பட்ட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் அடங்கிய தொகுப்பாகும்.
- பண்பாடென்பது மக்களால் ஆக்கம் பெற்ற கருவி. அந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்கின்றனர்.
- பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்க நெறிகள் சட்டம், வழக்கம் முதலானவையையும் மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக






இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுப்பு.

மேற்கூறிய வரையறைகள் மூலம் பண்பாடு பற்றி சிறிது அறிந்து கொள்ளலாம். பண்பாடு என்பது ஓர் இயல்பு; உள்ளார்ந்த தன்மை; அவற்றை உணரலாம் அறியலாம் அதனைச் சொற்களின் மூலம் முழுமையாக விளக்க இயலாது.

மேலும் பண்பாடு நாட்டிற்கு நாடு, இனத்திற்கு இனம், காலத்திற்கு காலம் மாறுபடுவது போல தோன்றலாம். இத்தோற்ற வேறுபாடுகள் தோன்றுவதற்குக் காரணம் மக்களின் நடை, உடை, பாவனைகளில் வெளிப்படும் கூறுகள். இவை உண்மையான பண்பாடு அல்ல.

ஒவ்வொரு பண்பாடும் குறிப்பிட்ட விழுமியங்களுக்கு முக்கியத்துவம் தருகின்றன. அதாவது சில பண்பாடுகள் தூய்மைக்கு முதலிடம் தருகின்றன. சில பண்பாடுகள் சமத்துவம், அமைதி, சார்புடமை, நேர்மை... போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுக்கின்றன.

நாகரிகம் உணவிலும் உடையிலும் இது போன்ற பிற வாழ்க்கையின் ஆரவாரங்களிலும் தோன்றுகின்ற ஒன்றாகும். பண்பாட்டையும் நாகரிகம் என சொல்லும் இடமுண்டு. "பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்" என்ற குறளில் பகைவர் மனமும் நோகாதவாறு வாழும் கண்ணோட்டம் நிறைந்த பண்பாட்டை வள்ளுவர் நாகரிகம் என்கிறார்.

ஆனால் பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கின்றோம். அவ் வெளிப்பாடு சுவையுணர்வாகவும், நடை, உடை, பாவனைகளாகவும் தோன்றும். அப் பண்பாடில்லாதவனை காட்டு மிராண்டி என்கின்றோம்.

வாழ்வின் பல போக்குகள் அமைந்த பல்வேறு நிலைகளையும் இப்பண்பாடென்பது குறிக்கும். உடலைப் பற்றிய நன்னிலை, மனத்தைப் பற்றிய தூய்மை நிலை பேச்சின் இனிமை இவை அனைத்தும் பண்பாட்டில் அடங்கும்.

"திரிகரணங்கள்" என்பது சமய சாத்திரங்கள் பேசும் மனமொழி மெய் என்பவற்றின் அமைதியே இங்கு குறிப்பிடப் படுகின்றது. பிறரை வேதனைப்படுத்தாத

**பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கின்றோம். அவ் வெளிப்பாடு சுவையுணர்வாகவும், நடை, உடை, பாவனைகளாகவும் தோன்றும். அப் பண்பாடில்லாதவனைக் காட்டுமிராண்டி என்கின்றோம்.**

நிலையில் இவற்றின் அமைதியை தமிழர்கள் மனதைப் பற்றிய உண்மை என்றும் உடலைப் பற்றிய மெய்மை என்றும் பேச்சினைப் பற்றிய வாய்மை என்றும் பண்பாட்டு நோக்கத்தில் பேசியதுடன் இவை அடிப்படையில் ஒன்றாக விளங்குவதையும் சுட்டி வந்தனர். முன்னர் கூறியது போல இவை மக்கட் கூட்டத்தின் சிறப்பியல்பாகவும் தனி மக்களின் சிறப்பியல்பாகவும் விளங்கும் போதே அதனை பண்பாடு என்கிறோம்.

இவ்வாறாக பண்பாடென்பது அனைவருக்கும் அவரவர் சமுதாய பண்பாட்டு விழுமியங்களுடன் வேறுபடுகின்றது. உதாரணமாக இலங்கையில் ஒரு பண்பாடும் இந்தியாவில் வேறு பண்பாடும் அமெரிக்காவில் வேறு பண்பாடும் காணப்படுவது இயற்கையே. ஏனெனில் அவை அனைத்தும் அவ்வவ் மக்களுக்கு ஏற்ப மொழி, மதம், இனம் நாடு, பழக்க வழக்கங்கள் என்பவற்றிற்கேற்ப வேறுபடுகின்றன.

ஒரு நாட்டிற்குள்ளேயும் பல்வேறு பண்பாட்டு விழுமியங்கள் காணப்படுகின்றன. இலங்கையை எடுத்துக் கொண்டால் இங்கே தமிழர், சிங்களவர், முஸ்லிம், பறங்கியர் என இவர்கள் அனைவரும் இலங்கையில் வாழ்ந்தாலும் இவர்களுடைய பண்பாடென்பது வேறுபட்டவையாக அமைகின்றன. இவற்றை நாம் நேரடியாகவே காண்கின்றோம்.

போருக்கு பின்னர் யாழ்ப்பாணத்தினுடைய பண்பாட்டுக் கோலங்களில் பாரிய மாற்றங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்திற்கென்றே தனித்துவமாகக் குறிப்பிட்டு சொல்லப்பட்ட பல்வேறு பண்பாட்டு விழுமியங்கள் வேற்று நாட்டு கலாசாரத்துடனும் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாகவும் பாரிய மாற்றங்களைக் கொண்டுள்ளன.

ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும் செயல்களுக்கும் நடத்தை முறைக்கும் [behavior Pattern] vitnait அவசியமென்று கருதப்படுகின்றதோ அவையே அப் பண்பாட்டின் விழுமியங்களாகும். மக்களுடைய பண்பாடானது மாற்றமடைந்து செல்வதற்கு பெரிதும் காரணமாக இருப்பது தொழில்நுட்ப வளர்ச்சி ஆகும்.

இன்றைய கால கட்டத்தில் சினிமா மூலமும் பல்வேறு பண்பாட்டு விழுமியங்கள் மாற்றமடைகின்றன. சினிமாவில் கட்டமைக்கப்படுகின்ற ஒவ்வொரு கதைக் களங்களில் ஊடுருவியுள்ள பண்பாட்டுக் கூறுகளானவை எளிதில் பாமர மக்கள், கற்றறிந்தோர் வரையில் சென்றடைகின்றன.

சினிமாவினுடைய பின்னணியிலே இன்றைய சிறுவர்கள், மாணவர்கள், இளைஞர்கள் பெரிதும் ஈர்க்கப்பட்டு அவ்வக் காலங்களில் வெளிவருகின்ற திரைப்படங்களின் வாழ்க்கைக் கோலங்களைத் தாமும் பின்பற்றி சமூகத்தில் வலம் வருகின்றனர்.

தொலைக் காட்சி சாதனமும் இவ்வாறே மக்களுடைய அன்றாட வாழ்க்கைக் கோலங்களை பண்பாட்டு அம்சங்களைத் திசை திருப்புவதாகவே உள்ளது.

உணவினை எடுத்துக் கொண்டால் பாரம்பரியமாக இருந்த உணவுகளை விடுத்து மேலைத்தேய பீட்ஸா, பேகர்...என Fast Food உண்பதையே கௌரவமாகவும் அவற்றினை வாங்குவதன் மூலம் சமூகத்தில் ஓர் அந்தஸ்தினை பெறுபவர்களாகவும் தப்பான அபிப்பிராயம் கெண்டுள்ளனர். இது உடல் நலத்திற்கு கேடான, பல்வேறு நோய்களைச் சிறுவயது முதலே ஏற்படுவதுடன் பொருளாதாரச் சிக்கல்களையும் ஏற்படுத்துகின்றது.

இன்று தொழில் நுட்பத்தின் மூலம் உலகமே கைக்குள் அடங்கி விட்டது. எந்தவொரு உலகச் செய்தியாயினும் இன்று உடனுக்குடனாக அறிந்து கொள்ள முடிகிறது. கைத்தொலைபேசி, இணையத்தளங்கள் போன்றவற்றின் வளர்ச்சி... இவ்வாறான அறிவியல் முன்னேற்றங்களைக் கொண்டு மனித சமூகம் பல நன்மைகளைப் பெறுகின்றது. இருந்த போதிலும் எந்தவொரு பொருளையும் அளவுக்கதிகமாக பாவிப்பதால் ஆபத்தே ஏற்படுகின்றது.

இன்று பேசப்படுகின்ற முக்கியமான குற்றச் செயல்களானவை சமூக வலைத் தளங்களிலேயே இடம் பெறுகின்றன. அவற்றினால் பல தற்கொலைச் சம்பவங்களும் இடம் பெறுவதனைக் காணக்கூடியதாயுள்ளது. இவ்வாறான தொழில்நுட்பத்தின் மூலமும் பண்பாடானது சிதைக்கப்படுகின்றது.

பொருளாதார நலன்களுக்காகவும் வேலை வாய்ப்புகளுக்காகவும் அரசியல் காரணமாகவும் மேலைத்தேய நாடுகளில் புலம் பெயர்ந்தவர்கள், அந்தந்த நாட்டு கலாசாரத்தை நமது கலாசாரத்துடன் இணைத்து குழப்பிக் கொள்ளும்போது பண்பாட்டு சிதைவினை ஏற்படுத்துகிறது.

ஒரு நாட்டினுடைய /இனத்தினுடைய பண்பாடானது இளைஞர்களிடமே தங்கியுள்ளது. புகைபிடித்தல், மது அருந்துதல் போன்ற போதைப்பொருள் பாவனையில் இளைஞர்கள் ஈடுபடுகின்றனர். இதன் ஒரு விளைவாக கடந்த மாதம் யாழ்ப்பாணத்தையே அச்சத்தில் உறைய வைத்த அச்சுவேலியில் இடம் பெற்ற முக்கொலையினை குறிப்பிடலாம்.

இளைஞர்களுடைய நிலை இவ்வாறிருக்க பெண்களின் நிலையோ வேறு விதமாக உள்ளது. நூற்றுக்கு எண்பது வீதமானவர்கள் விளம்பரங்கள், திரைப்படங்கள், வெளிநாட்டு மோகம் போன்றவற்றின் ஆதிக்கத்தினாலேயும் தமது பண்பாட்டை தாமே சிதைக்கின்றனர்.


பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கமாகும். இது எளியோரிடத்தும் இனிமையாக பேசுவது, அயலவரை விருந்தோம்பும் பண்பு, மானம் கெடின் உயிரை விடுவது போன்றன உள்ளத்தின் செம்மையாகும்.

பண்பாடும் நாகரிகமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாகவே காணப்படுகின்றன. மக்கள் அனைவரும் தமது அன்றாட வாழ்க்கை கோலங்களிலிருந்தே தமது நாகரிகத்தினுடைய வளர்ச்சியினுடாக சென்றாலும் தனித்துவமான தொன்றாக கட்டிக் காப்பாற்ற வேண்டும். பண்பாடு மிக்க சமுதாயத்தினை மீளக் கட்டி எழுப்புவதற்கு அனைவருமே ஒன்றிணைய வேண்டும்.

**கல்பனா செல்வரட்ணம்**
மெய்யியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்

# வெளிநாடுகளிடம் அனுதாபத்தை எதிர்பார்த்த காலம் முடிந்தது

## ஜனாதிபதி தெரிவிப்பு



வெளிநாடுகளின் அனுதாபத்தைக் கோரிய காலம் முடிவடைந்து விட்டதாகவும், அனுதாபத்தை எதிர்பார்த்த, அனுதாபம் கோரிய காலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தற்போது பெருமிதத்துடன் நிமிர்ந்து நிற்கும் நாடாக இலங்கை உருவாகியுள்ளது எனக் கூறியுள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றிய போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

\ தோல்வியடைந்த நாடுகளைப் போன்று எவரின் அனுதாபத்தையும் கோரி நிற்க வேண்டிய அவசியமில்லை.

நாட்டை நேசிக்கும் ஓர் மாணவ சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

நாடு பற்றி பெருமிதத்துடன் பேசக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான பந்துல குணவர்த்தன, துமிந்த திஸாநாயக்க, ரவூப் ஹக்கீம், பிரியங்கர ஜயரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க ,உயர் நீதிமன்ற நீதியரசர் மொஹான் பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, றோயல் கல்லூரி அதிபர் உபாலி குணசேகர மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்

# கடும் போக்குவாத அமைப்புகளை ஒடுக்குவதற்கு நடவடிக்கை


## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சிங்கள மற்றும் முஸ்லிம் கடும்போக்குவாத அமைப்புக்கள் இயங்கி வருவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். இவ்வாறான கடும்போக்குடைய அமைப்புக்களை இல்லாமற் செய்ய அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவதாக தெரிவித்துள்ளார். இன சமூகங்கள் மீது ஒடுக்குமுறை பிரயோகிக்கப்படுவதாக சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் பிரச்சாரங்களில் எவ்வித உண்மையும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்த தென் ஆபிரிக்க துணை ஜனாதிபதி சிறில் ரமபோசாவிற்கு இந்த நிலைமைகளை நேரில் பாரவையிட சந்தர்ப்பம் கிட்டியதாக தெரிவித்துள்ளார்.அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை ஆட்சி கவிழ்ப்பதற்கான ஓர் உத்தியாக சில தன்னார்வத்தொண்டு நிறுவனங்களும் ஏனைய வெளிநாட்டு சக்திகளும் பயன்படுத்திக் கொண்டதாக தெரிவித்துள்ளார்.அரசாங்கம் சரியான பாதையிலேயே பயணம் செய்கின்றது நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து திருப்தி அடைய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆந்திர முதல்வரை சந்தித்தார் பீரிஸ்



இலங்கை, இந்திய உறவைப்பலப்படுத்தும் நோக்கில் உத்தியோக பூர்வ விஜயம் மேறகொண்டு இந்தியா சென்றிருக்கும் வெளி விவகார அமைச்சர் ஜீ. எல்.பீரிஸ், ஆந்திர மாநிலத்திற்குச் சென்று அந்த மாநில முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவைச் சந்தித்துப் பேச்சு நடாத்தியுள்ளார். ஆந்திர பிரதேசத்தின் நாகர்ஜுனா சாகர் என்னும் இடத்திலுள்ள பரவதர்ம பௌத்த பூங்காவில் தற்போது முடிவடையும் தறுவாயிலுள்ள பௌத்த சிலையின் நிர்மாணப்பணிகள் இலங்கைக்கும் ஆந்திராவுக்குமிடையிலான உறவிற்குரிய சான்றாகுமென முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு, அமைச்சர் பீரிஸிடம் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை- ஆந்திர உறவுகளை பலப்படுத்தும் வகையிலான வர்த்தகம். முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை ஆகியன தொடர்பில் அமைச்சர் பீரிசும் முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவும் விரிவாக ஆராய்ந்தனர். அத்துடன் இலங்கை- ஆந்திரா இடையிலான வியாபார மற்றும் சுற்றுலாத்துறை உறவுகளை மேலும் விஸ்தரிப்பதற்கு நேரடி விமான சேவையின் முக்கியத்துவம் குறித்தும் இச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

# விசாரணைக்குரிய ஆதாரங்களை திரட்டவே ரமபோசா குழு வ்

## என்கிறார் குணதாச அமரசேகர



சர்வதேச விசாரணைக்குத் தேவையான மேலதிக ஆதாரங்களை சேகரிக்கும் நோக்கிலேயே தென்னாபிரிக்க பிரதிநிதிகள் குழு இலங்கை வந்து இவை அனைத்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சதித்திட்டம் என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

தென்னாபிரிக்கா தலையிட்டு எமக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை எமக்கில்லை. இந்த நாட்டின் பிரசசினைகளுக்கான தீர்வினை நாமே பெற்றுக்கொள்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும குறிப்பிடுகையில்

இலங்கையில் பெரியளவில் இன முரண்பாடுகள் இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர சர்வதேசத்திடம் சித்திரித்து நாட்டில் இல்லாத பிரச்சினைக்ளை உருவாக்க நினைக்கின்றனர். அதன் விளைவாகவே இன்று இலங்கைக்கு சர்வதேசத் தலைவர்களின் அடுத்தடுத்த விஜயங்கள் நிகழ்ந்துள்ளன. தற்போது தென்னாபிரிக்க பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டு இருதரப்பினருடனும் பேச்சு நடாத்திச் சென்றுள்ளனர்.

ஆனால் உண்மையிலேயே தென்னாபிரிக்கா இலங்கையில் பேச்சு நடாத்தும் நோக்கில் வரவில்லை. இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணை இன்று இலங்கைக்கு வெளியில் ஆரம்பிததுள்ளது.

யுத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பொய்யான ஆதாரங்களுடன் சர்வதேசம் இலங்கையைத் தண்டிக்க தயாராக உள்ளது. இவ்விசாரணைக்கு மேலும் ஆதாரங்களை சேகரித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆசையை நிறைவேற்றிக்கொடுக்கும் நோக்கத்திலேயே தென்னாபிரிக்க பிரதிநிதிகள் குழுவினர் இலங்கைக்கு வந்தனர்.

அவர்கள் அரச தரப்புடன் பேசுவதை விடவும், கூட்டமைப்பினருடனும் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனுடனும் பேச்சுவார்த்தை நடாத்தி வடக்கின் நிலைமைகள் தொடர்பில் மேலும் பல தவறான ஆதாரங்களைக்கொண்டு சேர்க்கவே ஈடுபட்டுள்ளனர். அரசாங்கம் இவை அனைத்தையும் விளங்கிக்கொள்ளாது சர்வதேசத்தை நாட்டுக்குள் இடமளிப்பது எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்திற்கே அச்சுறுத்தலாக அமையும்.

மேலும், இன்று இடம்பெறும் சம்பவங்கள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திட்டமிட்ட சூழ்ச்சிகள். அவர்களின் சதித்திட்டம் இதுவரையில் சரியாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதை அரசாங்கம் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். அதேபோல் இலங்கையின் பிரச்சினைகளில் தென்னாபிரிக்கா தலையிட்டு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற தேவை எமக்கில்லை.

இலங்கையில் யுத்தமொன்று இடம்பெற்றபோது எவரும் தீர்வு விடயத்தில் பேசவில்லை. இப்போது நாமாக யுத்தத்தினை முடிவிற்கு கொண்டு வந்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

# பௌத்தர்களை சர்வதேசத்தில் அவமானப்படுத்துகிறார் ஹக்கீம்

## குற்றம் சுமத்துகிறது ஹெல உறுமய

அண்மையில் அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பில், சிங்கள பௌத்த மக்களை சர்வதேச ரீதியில் அவமானத்திற்குள்ளாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதான நபராக உள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவிதத்துள்ளது.

அந்தக் கட்சியின் தலைவர் ஓமல்பே சோபிததேரர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இதனைக் கூறியுள்ளார்.


அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் ஏற்பட்ட துரதிஷ்டவசமான மோதல்கள் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல்வேறு கருத்துக்களும் விமர்சனங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றில், நாட்டின் பெரும்பான்மை பௌத்த மக்களுக்கும், பௌத்த பிக்குகளுக்கும், பௌத்த அமைப்புக்களுக்கும் எதிராக பாரிய தாக்குதல்கள் தொடுக்கப்பட்டு உண்மை மூடி மறைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வாழ் பௌத்த மக்கள் அசிங்கப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களை அபகீர்த்திக்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கும் பிரசார யுத்தம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நீதியமைச்சர் இதில் முதன்மையாக இருந்து செயற்பட்டுள்ளார். ஏனைய முஸ்லிம் தலைவர்கள் பலர் சிங்கள பௌத்த மக்களுக்கு எதிராக பொய்யான அவதூறுகளைப் பரப்பி வருகின்றனர்.

சர்வதேச ஊடகங்களுக்கு பேட்டிகளை வழங்கி, பௌத்த பயங்கரவாதம் மற்றும் அடிப்படைவாதம் பற்றி பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர். இதன்



மூலம் இலங்கையின் பௌத்த மக்கள் அவமானத்திற்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்தச்சம்பவங்களின் உண்மை நாட்டுக்கும், உலகத்திற்கும் மறைககப்படக் காரணம் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் உத்தியோகபூர்வமற்ற தணிக்கையாகும்.

அளுத்கம சம்பவங்கள் தொடர்பில் சட்டத்தை அமுல்படுத்தும் விதம் பக்கச்சார்பாக இருப்பது எமக்கு ஆழ்ந்த மன வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் ஓமல்பே சோபித தேரர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் மேலும் கூறியுள்ளார்

# காணாமற்போனோர் குறித்து 19ஆயிரம் முறைப்பாடுகள் பதிவு

30 வருட கால யுத்தத்தினால் காணாமற் போனோர் தொடர்பில் இதுவரையில் 19,000 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட காணாமற் போனோர் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி மக்ஸ்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்தார்.

கடந்த 5, 6, 7, 8ஆம் திகதிகளில் முல்லைத்தீவில் நடாத்தப்பட்ட விசாரணைகளின் போது 387 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அவற்றில் 129பேரிடம் நேரடியாக விசாரணை மேற்கொண்டுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

2013ஆம் ஆண்டு 15ஆம் திகதி எமது ஆணைக்குழு இயங்கத் தொடங்கியது. அன்று தொடக்கம் இன்றுவரை அதில் தமிழர் தரப்பிலிருந்து 12,590 முறைப்பாடுகளும் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஆயிரத்துக்கு உட்பட்ட முறைப்பாடுகளும் இராணுவத் தரப்பிலிருந்து 5 ஆயிரம் முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதுவரை வடக்கு, கிழக்கின் திருகோணமலை, அம்பாறை, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களுக்கு நேரடியாக விசாரணைகளுக்குச் சென்றால் மேலும் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சட்ட திணைக்களத்தின் பிரதிச் சட்ட அலுவலகர் திருமதி மனோகரி ராமநாதன், இந்த ஆணைக்குழுவின் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். எங்களால் பதியப்பட்ட சகல விசாரணைகளும் சட்ட திணைக்களத்திடம் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# குடாநாட்டில் மிருகபலியிடல் நிகழ்வு

# இன்னும் தொடர்ந்த வண்ணமுள்ளது

## வாசு தேவக்குருக்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

இந்துகலாசார அலுவல்கள் திணைக்களம் மிருகபலியிடல் குடாநாட்டில் தவிர்க்கப்படல் வேண்டும் எனக் கூறியுள்ள போதும் ஆலயங்களின் முன்னால் கடா மற்றும் சேவல் பலியிடும் நிகழ்வு தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

இவ்வாறு சித்தன் கேணி தனுவோடை பதி சிவன்தேவஸ்தான பிரதம குரு வித்தியாசேகரம் சிவஸ்ரீ சபா வாசு தேவக் குருக்கள் தெரிவித்தார்.

தேசிய சுற்றுச்சூழல்தினம் வலி.மேற்கு பிரதேச சபையில் நடைபெற்றது. இதன் போது அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இன்று ஆலயங்களில் நடப்பவை தொடர்பான வரலாற்றுப் பார்வை தொடர்பான நீண்ட உரையை சிவஸ்ரீ சபா வாசு தேவக்குருக்கள் வழங்கினார்.

இதில் சபா வாசுதேவக் குருக்கள் மேலும் பேசுகையில், மிருகங்கள், பட்சிகளிடம் அன்பு, காருண்யம் செலுத்துங்கள் அவை ஆறறிவு இல்லாவிட்டாலும், பகுத்தறிவு உடையவை.

இவ்வாறான வாய்பேசாத அன்புள்ள மிருகங்களை ஆலயத்தின் பெயரால் பலியிடுவது உடன் நிறுத்தப்பட வேண்டும். மனிதன் எப்போது மனிதனை வணங்கினானோ, அன்றில் இருந்து இன்றுவரை பிரச்சினை தொடர்கிறது. மேலும் ஆலயங்களில் தமிழ்ப் பூசை செய்யும் வழிபாடு ஆரம்பித்த நாள் முதல ஆலயத்தின் முன் மிருகங்களை கோரமாக வெட்டிச் சரித்து அதில் இன்பம் காணுகின்றனர்.

இதனைப் பார்த்த சமூகமே இன்று வாள் எடுத்து இரவு பகலாக வீசிவருகின்றது. எனவே இவ்வாறான பலியிடல் வடக்கில் மட்டுமல்ல இந்த அகில இலங்கையிலும் உடன் நிறுத்துவதற்கு சகலரும் முன் வரவேண்டும். இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் உச்சக்கட்ட நடவடிக்கையினை எடுத்துள்ளது.

எனவே அனைத்து அன்புள்ளங்களும், மகா சபைகளும், இந்து மதத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களும் இணைந்து மிருக பலியிடலை இவ்வாண்டில இருந்து நிறுத்தி நல்ல தொரு சமுதாயத்தை நிலை நிறுத்தி வாழ்ந்து காட்ட அனைவரும் ஒன்றிணைந்திடவேண்டும். (92)



யாழ். இந்துக் கல்லூரியில் புதிதாக அமைய இருக்கின்ற முகப்புவாயில் அலங்கார வளைவுக்கு நேற்றுமுன்தினம் அத்திபாரம் இடப்பட்ட போது... (48)

## டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் டெங்கு நோய் சம்பந்தமான விழிப்புணர்வும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் சுகாதாரப் பிரிவினர் மற்றும் தொண்டர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள் எனப் பலர் வீடு வீடாகச் சென்று மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தனர்.

யாழ்.குடா நாட்டில் மீண்டும் டெங்கு நோய் பரவி வருவதாக வைத்தியசாலை அறிக்கைகள் ஊடகங்கள் மூலம் பொது மக்களுக்கு தெரியப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (150)

# "பால்நிலை சமத்துவம்" நாடக பயிற்சிப்பட்டறை

கிளிநொச்சி கரைச்சி பிரதேச கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினால் பால் நிலைச்சமத்துவம் என்னும் கருப்பொருளினை அடிப்படையாகக் கொண்ட தெரு வெளி நாடக பயிற்சிப்பட்டறை நிகழ்வு கனகபுரம் பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கல்லூரியில் கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் சமாச இணைப்பாளர் எஸ்.ஜீவநாயகம் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை இடம்பெற்றது.

தெருவெளி நாடக பயிற்சிப்பட்டறையின் தொடக்க நிகழ்விற்கு விருந்தினர்களாக கிளிநொச்சி காவேரி கலாமன்ற இயக்குநர் யோசுவா அடிகளார் பண்டிதர் பரந்தாமன் கவின் கலைக்கல்லூரி பணிப்பாளர் க.செளந்தர்ராஜா கரைச்சி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் கு.ரஜீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தெரு வெளி நாடக பயிற்சிப்பட்டறையின் வளவாளர்களாக புத்தாக்க அரங்க இயக்கத்தின் இயக்குநர் எஸ்.ரி.குமரன் நிர்வாகப்பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் ஆற்றுகை இணைப்பாளர் உ.ஹரீஸ் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிப்பட்டறையினை திறம்பட வழிநடாத்தியுள்ளனர்.

பயிற்சிப்பட்டறையில் பி.உமாகாந் தலைமையிலான நாடகக் குழுவின் 15 ஆற்றுகையாளர்கள் கலந்து கொண்டு தெரு வெளி நாடகம் சம்பந்தமான விடயங்களை அறிந்து கொண்டதுடன் பால் நிலை சமத்துவம் என்னும் கருப்பொருளினை அடிப்படையாகக் கொண்ட தெரு வெளி நாடக ஆற்றுகை ஒன்றையும் தயாரித்தனர். இத் தெருவெளி நாடக ஆற்றுகையானது கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட 60 இடங்களில் ஆற்றுகை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத் தெரு வெளி நாடகத்திற்கான நிதி அனுசரனையினை அக்ரட் நிறுவனம் வழங்குகின்றது.

இப்பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்ட ஆற்றுகையாளர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது தெருவெளி ஆற்றுகைக்கான நடிப்பு முறைமை அசைவியக்கம் பாத்திர ஊடாட்டம் குரல் வெளிப்பாட்டு முறைமை பார்வையாளர்களுடான தொடப்பியக்கமுறைமை ஆடல் பாடல் இசை கையாள்கை என்பன போன்ற தெருவெளி நாடகத்திற்குரிய விடயங்களைக் கற்றுக்கொள்ளமுடிந்ததாகவும் பயிற்சிப்பட்டறை மிகவும் பயனுள்ள வகையில் அமைந்ததாகவும் தெரிவித்தனர். (63)

## ரமழான் நற்சிந்தனை



எந்த மனிதர் தன் சகோதரருடைய தேவையை நிறைவேற்றுவதற்கு நடந்து சென்று முயற்சி செய்கிறாரோ அது அவருக்கு பத்து ஆண்டுகள் இஃதிகாஃப் இருப்பதை விடச்சிறந்ததாகும்.

நூல் - தப்ராணி (105)

# மாணவர்களுக்கு பற்சிகிச்சை

(வரணி)

வரணிப்பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு கடந்த திங்கட்கிழமை வரணிப்பிரதேச வைத்தியசாலையில் வைத்து பல் வைத்தியரர்ல் சிகிச்சை வழங்கப்பட்டது.

இச்சிகிச்சையால் பல மாணவ மாணவியர் பயன் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (150)

## முரசின் இன்றைய பலன்



(12.07.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் ஆனி மாதம் 28 ஆம் திகதி.

பூரணை / சித்தம்.

பூராட நட்சத்திரம் மு.இ. 07.20 வரை. பின் உத்தராடம்.

இராகு காலம் 06.29 - 10.29 வரை. சுபநேரம் 02.59 - 04.29 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | புதிய மனை அமைக்க பொருத்தமான இடத்தை தேர்ந்தெடுக்க சோதிடரை நாடல், நிறைவேற்றி வைத்த திருமணத்தரகுக் கூலி பெறச் சென்றவேளை முரண்பாடு ஏற்படல். |
| ரிஷபம் | வெளியூர் பயணம் முகவரின் திருவிளையாடலால் காலை வாரிவிடுதல், பொறுப்பின்றிக் கையளித்த பணத்தை கேட்கச் சென்ற விடத்து களேபரம் உருவாதல். |
| மிதுனம் | காணாமற் போனவர் பற்றிய தகவல் கசிந்ததை எண்ணி அளவிலா மகிழ்ச்சியடைதல், உரைத்துப் பார்த்த வேளை போலி நகையெனக் கண்டதால் மோசடி ஏற்படாமை. |
| கடகம் | பெற்றோரின் புத்திமதியை செவிமடுத்ததினால் ஏற்படவிருந்த அவமானம் விலகுதல், நிறைகுறைவான பொருட்களை விற்க முயன்றவேளை வாடிக்கையாளருடன் முறுகல் நிலை. |
| சிம்மம் | நீண்டகாலமாக தூர இடத்திலிருந்து தொலைபேசி உரையாடல் மூலம் கிடைத்தல், சுபகாரிய மொன்று எதிர்பாராமல் ஏற்பட்டவேளை பணம் பெற நண்பர்களை நாடல். |
| கன்னி | விவாகத்திற்காக தமிழ் நாடு செல்ல உறவினர் சகிதம் புறப்படல், ஆவணங்களில் நம்பகத்தன்மை அற்றுப் போனதால் பூமி கொள்ள பின்னடித்தல். |
| துலாம் | இடைத்தங்கல் நாட்டில் அஞ்ஞாதவாசம் புரிந்து தாயகம் திரும்பும் அவலநிலை, இரத்ததானம் இலவசமாக செய்தவேளை நன்றியை இறைவனுக்கு தெரிவிக்கும் படி கூறிவிடல். |
| விருச்சிகம் | மருத்துவர்களாலும் குணப்படுத்த முடியாத நோயால் தெய்வதரிசனம் மேற்கொள்ளல், அயலவர்களுடன் நிலவிக காணப்பட்ட பகைமை மறைந்து உறவுக்கு கைகொடுத்தல். |
| தனுசு | வேலையாட்களின் நடவடிக்கையில் சந்தேகக்கோடு ஏற்பட்டதால் விழிப்பாக இருத்தல், அசாதாரண வேகம் விபத்தினை ஏற்படுத்த முயன்றவேளை மயிரிழையில் தப்பிவிடல். |
| மகரம் | எதிர்பார்த்திருந்த பணவரவு கிட்டாமையினால் சுபகாரியத்தை ஒத்தி வைத்தல், குடும்பநலன் கருதி பிணக்கு ஏற்பட்டவேளை வெளிக்காட்டமை. |
| கும்பம் | "வீசா" பெற்ற பிள்ளையை எண்ணி குடும்பத்தவர்கள் மகிழ்ச்சியடைதல், உணவுக்கட்டுப்பாட்டினை மேற்கொண்டதால் நோயின் தாக்கம் குறைவடைதல். |
| மீனம் | வெளியூர் பயணம் நிமித்தம் பணத்திற்காக சொத்தினை அடகு வைக்கும் நிலைப்பாடு, குணமடைந்த பிணி மீண்டும் பிதாவிற்கு ஏற்பட்டமையினால் கவலையுறல். |

# 3ஆம் இடத்திற்கான ஆட்டம் இன்று; பிரேசில், நெதர்லாந்து பலப்பரீட்சை

(பிரேசிலியா)

உலகக் கிண்ண கால்பந்துப் போட்டித் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டிவிட்டது. நாளை மறுநாள் நடைபெறும் இறுதிப்போட்டியில் ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த ஜேர்மனியும் - தென் அமெரிக்க கண்டத்தைச் சேர்ந்த ஆர்ஜன்ரீனாவும் மோதவுள்ளன.

முதல் அரையிறுதி போட்டியில் ஜேர்மனி அணி 7-1 என்ற கோல் கணக்கில் பிரேசிலை தோற்கடித்தது. 2ஆவது அரையிறுதியில் ஆர்ஜன்ரீன அணி தண்ட உதை மூலம் 4-2 என்ற கணக்கில் நெதர்லாந்தை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

அரை இறுதியில் தோற்ற பிரேசில், நெதர்லாந்து அணிகள் 3ஆவது இடத்துக்கான போட்டியில் இன்றைய தினம் மோதவுள்ளன.. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி நள்ளிரவு 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

போட்டியை நடாத்தும் பிரேசில் அரை இறுதியில் ஜேர்மனியிடம் படுதோல்வி அடைந்ததை அந்நாட்டு இரசிகர்களால் ஜீரணிக்க முடியவில்லை. இதனால் இன்றைய ஆட்டத்தில் வென்று 3ஆவது இடத்தைப் பிடிக்க அந்த அணி முயற்சிக்கும்.



பிரேசில்



நெதர்லாந்து

அந்த அணி நட்சத்திர வீரர் நெய்மர் காயம் காரணமாக விலகியது பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. அவரது இடத்தை நிரப்ப முடியவில்லை. கடந்த அரையிறுதியில் விளையாடாத கப்டன் சில்லா இன்றைய ஆட்டத்தில் களம் இறங்குகிறார். இதனால் பிரேசில் அணி நம்பிக்கையுடன் களம் இறங்கும். இருந்தபோதிலும் நெதர்லாந்துக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவது அவசியமாகும்.

நெதர்லாந்து அணி அரை இறுதியில் ஆர்ஜன்ரீனாவுக்கு எதிராகப் போராடியே தோற்றது. இதனால் அந்த அணி நம்பிக்கையுடன் உள்ளது.

நெதர்லாந்து அணியில் கப்டன் வான்பேர்சி, ரொபன் போன்ற நட்சத்திர வீரர்கள் உள்ளனர். மேலும் அந்த அணியின் தாக்குதல் ஆட்டம் சிறப்பாக இருக்கிறது.

முன்களத்தில் வீரர்களை ஊடுருவி பந்தை அருமையாக கடத்திச் செல்கிறார்கள். இதனால் அந்த அணியின் தாக்குதல் ஆட்டத்தை சமாளிக்க பிரேசில் அணி கடுமையாக போராட வேண்டியிருக்கும்.

கடந்த முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறி தோற்ற நெதர்லாந்து அணி இம்முறை அரையிறுதியில் தோற்றது. இதனால் எப்படியாவது 3ஆவது இடத்தை தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ளது. 3 முறை இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற நெதர்லாந்து தோல்வியைச் சந்தித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## களத்திற்கு வெளியில்...

நெய்மர் நீங்கள் காயத்தில் இருந்து மீண்டு, மிக வலிமையான வீரராக உருவெடுப்பீர்கள். எனது ஆதரவு எப்போதும் உங்களுக்கு உண்டு. கால்பந்துப் போட்டிகளில் இது போன்ற சம்பவங்கள் நடப்பது இயல்புதான். இது குறித்து அதிகம் கவலைப்படவேண்டாம்.

**டேவிட் பெக்காம் (இங்கிலாந்து முன்னாள் வீரர்)**

முதல் ஷொட்டை அடிக்குமாறு 2 பேரிடம் கேட்டேன். அவர்கள் மறுத்து விட்டனர். வ்லாரும் சிறந்த வீரர்தான். துரதிஷ்டவசமாக அவரால் கோலாக்க முடியவில்லை. கோஸ்டரிகாவுக்கு எதிரான எங்களது பெனால்டி ஷூட் அவுட் கேம் சிறப்பானது. மாற்று கோல் காப்பாளராக களமிறங்கிய டிம் க்ரூல் 2 பெனால்டி ஷொட்களை தடுத்தார். ஆனால், ஆர்ஜன்ரீனாவுக்கு எதிராக ஏற்கனவே 3 பேரை மாற்று வீரர்களாக களமிறக்கியதால் க்ரூலை களமிறக்க முடியவில்லை.

**வான் கால் (நெதர்லாந்து பயிற்சியாளர்)**

ஜேர்மனியுடனான இறுதி ஆட்டம் ஒரு போர்க் களம். எங்களை விட ஜேர்மனிக்கு அதிக வாய்ப்புள்ளது. காரணம், எங்களை விட அவர்களுக்கு கூடுதலாக ஓய்வு நாள் கிடைத்துள்ளது. மேலும், அரையிறுதியில் எங்கள் அணி வீரர்கள் கூடுதல் நேரத்தில் விளையாடியுள்ளனர். ஆனால், ஜேர்மனிக்கு அத்தகைய சூழல் நேரிடவில்லை. ஒருநாள் ஓய்வுக்குப் பின், ஜேர்மனி போன்ற பலம் வாய்ந்த அணியுடன் மோதுவது சவாலானது. ஆனால், உச்சத்தை அடைய எங்களால் முடிந்த அனைத்தையும் அளிப்போம்.

**அர்ஜன்ட்ரோ சபெல்லா (ஆர்ஜன்ரீன பயிற்சியாளர்)**

பெனால்டி கிக் என்பது எப்போதுமே அதிர்ஷ்டம்தான். அது தான் உண்மையும்கூட. இருப்பினும் நம்பிக்கையுடன் இருந்தேன். எல்லாம் நன்றாக நடந்ததற்காக கடவுளுக்கு நன்றி. இந்த வெற்றியை எனது பெற்றோருக்கு அர்ப்பணிக்கிறேன். என்னால் சிறப்பாக செயற்பட முடியும் என்று தொடரின் ஆரம்பத்தில் இருந்தே நம்பிக்கை வைத்திருந்தேன். தற்போது மகிழ்ச்சியில் திளைத்துள்ளேன்.

**ரோமிரோ (ஆர்ஜன்ரீன கோல் காப்பாளர்)**

அரையிறுதியில் ஆர்ஜன்ரீன அணியினர் பல வாய்ப்புக்களை தவறவிட்டனர். வெற்றி பெற எங்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. மொத்தத்தில், ஆர்ஜன்ரீன அணிக்கு அரையிறுதியில் வெற்றி பெறும் தகுதி இல்லை. இறுதிப் போட்டியில் ஜேர்மனி திறமையை நிரூபிக்கும். அந்த அணியில் எனது நண்பர்கள் பலர் உள்ளனர். அந்த அணி தான் சம்பியன் பட்டம் வெல்லும் என்று நம்புகிறேன். இருப்பினும், நெதர்லாந்து அணியில் இருப்பதற்காக பெருமைப் படுகிறேன். இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாத நிலைக்கு யாரையும் குற்றம் சுமத்த விரும்பவில்லை.

**அர்ஜென் ரொபென் (நெதர்லாந்து கப்டன்)**

பிரேசிலுக்கு எதிராக அரையிறுதிப் போட்டியை மிகவும் இரசித்து விளையாடினோம். அதில் அபார வெற்றி பெற்றோம். ஆனால் அதையே நினைத்துக் கொண்டிருக்கவில்லை. 24 மணி நேரத்தில் மறந்து விட்டோம். தற்போது ஆர்ஜன்ரீனாவுக்கு எதிராக இறுதிப்போட்டி மீதே முழுக் கவனம் செலுத்தி வருகிறோம். அதில் எங்களது திறன்களைக் காட்ட வேண்டியது அவசியம். ஜேர்மனி சம்பியன் பட்டம் வெல்லும் என்று கூறுகிறார்கள். ஆனால் ஆர்ஜன்ரீன அணி சவாலானது.

**குளோஸ் (ஜேர்மனி வீரர்)**

ஜேர்மனி அணியை கண்டு எங்களுக்கு எந்தவித பயமும் கிடையாது. ஜேர்மனி அணியை நாங்கள் மதிக்கிறோம். ஆர்ஜன்ரீன அணி இறுதிப்போட்டிக்குள் நுழைந்து இருப்பதால் ஜேர்மனி அணியினர் கவலை அடைந்து இருக்கக் கூடும். இறுதிப்போட்டியில் வெற்றிக்காக எல்லா வீரர்களும் கடைசி வரை போராடுவார்கள்.

**கோன்சலோ ஹுகுவைன் (ஆர்ஜன்ரீன வீரர்)**

# அரசியல் தலையீட்டால் நைஜீரியாவுக்கு வந்தது தடை

(அபுஜா)

அரசியல் தலையீடு காரணமாக, நைஜீரிய கால்பந்து கூட்டமைப்புக்கு (என்.எப்.எப்.,), சர்வதேச கால்பந்து சங்கங்களின் கூட்டமைப்பு (பிபா) தடை விதித்தது.

பிரேசிலில் நடைபெற்று வரும் 20ஆவது உலகக் கிண்ண கால்பந்து தொடரில், "எப்" பிரிவில் இடம்பெற்ற நைஜீரிய அணி, 1998 இற்குப் பின் முதன்முறையாக ரவுண்ட்-6 சுற்றுக்கு முன்னேறியது. இத்தொடரின் போது சம்பள பாக்கி உள்ளிட்ட பிரச்சினை காரணமாக, நைஜீரிய கால்பந்து கூட்டமைப்பின் (என்.எப்.எப்.,) தலைவர் அமினு மைகாரிக்கும், வீரர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. பிரான்சுக்கு எதிரான விலகல் போட்டியில் தோல்வி அடைந்த நைஜீரிய அணி ஏமாற்றத்துடன் நாடு திரும்பியது.

வீரர்கள் பிரச்சினையைக் கையில் எடுத்த நைஜீரிய விளையாட்டு அமைச்சகம், கால்பந்து கூட்டமைப்பை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடிவு செய்தது. இதற்காக உயர் நீதிமன்றத்தை அணுகியது. பின், என்.எப்.எப்., தலைவர் அமினு மைகாரியை கைது செய்தது. நீதிமன்ற உத்தரவின் படி, கால்பந்து கூட்டமைப்பை வழிநடத்த, விளையாட்டு அமைச்சகம் சார்பில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

இதனையடுத்து பிபா சார்பில் அவசர குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கால்பந்து கூட்டமைப்பு அல்லது சங்கம் தன்னிச்சையாக செயற்பட வேண்டும். ஒருவேளை அரசியல் தலையீடு உள்ளிட்ட மூன்றாவது நபர் குறுக்கீடு இருக்கும் பட்சத்தில், பிபா அமைப்பில் இருந்து குறிப்பிட்ட சங்கம் அல்லது கூட்டமைப்பு நீக்கப்படும். எனவே நைஜீரிய கால்பந்து கூட்டமைப்புக்கான தடை உடனடியாக அமுல்படுத்தப்படும் என முடிவு செய்யப்பட்டது.

நீதிமன்ற உத்தரவை வாபஸ் பெற்று, முறைப்படி தேர்தல் மூலம் புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படும் வரை, இந்தத் தடை நீடிக்கும். அதுவரை நைஜீரிய சார்பில் சர்வதேச, கிளப் அணிகளுக்கு இடையிலான போட்டிகளில் எந்த ஒரு அணியும் பங்கேற்க முடியாது. இதனால் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பெண்களுக்கான உலகக் கிண்ண (20 வயது) கால்பந்து தொடரில், நைஜீரிய அணி பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## நெய்மர் முன்னேற்றம்

முதுகு தண்டுவடத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வரும் பிரேசில் அணி நட்சத்திர வீரர் நெய்மர், நன்கு குணமடைந்து வருவதாக பார்சிலோனா கிளப் அணி மருத்துவ குழு அறிவித்துள்ளது. நெய்மருக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை பற்றிய விபரங்களை ஆய்வு செய்த மருத்துவ குழுவினர், காயம் விரைவாக குணமடைந்து வருகிறது.

ஆகஸ்ட் 5ஆம் திகதிக்கு பின்னர், பார்சிலோனா நகர மருத்துவமனையில் அவர் இறுதிக்கட்ட சிகிச்சையை தொடர ஏற்பாடு செய்து வருகிறோம் என தெரிவித்துள்ளனர். பிரேசில் - நெதர்லாந்து அணிகளிடையே நாளை நடைபெறவுள்ள 3ஆவது இடத்துக்கான ஆட்டத்தை, நெய்மர் நேரில் பார்க்கவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கராத்தே சுற்றுப் போட்டி

(பருத்தித்துறை)

சிகான் பொனிறோபேட் நினைவாக பருத்தித்துறை தற்காப்புக் கலையகம் நடாத்தும் இரண்டு நாள் கராத்தே சுற்றுப் போட்டி இன்று பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

நாளை வரை நடைபெறவுள்ள இப்போட்டித் தொடரில் தனிக் காட்டா மற்றும் குழுக் காட்டா, குமித்தே போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும், இதில் வெற்றியீட்டுவோருக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இது போன்ற கராத்தே சுற்றுப் போட்டிகள் தொடர்ந்தும் நடாத்தப்பட்டால் வீரர்களின் தரத்தை உயர்த்த துணை புரியும் என கராத்தே வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். (62)

# இராசதுரை நினைவுக் கால்பந்து இன்று அரையிறுதி, இறுதி ஆட்டம்

அமரர் இராசதுரை நினைவுக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவள்ளன.


வடக்கு மாகாணப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் யாழ். மத்திய கல்லூரியினால் நடாத்தப்பட்ட அமரர் இராசதுரை நினைவுக் கிண்ண கால்பந்தாட்டத் தொடர் நேற்றுக் காலை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 15 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்டன. விலகல் முறையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ், நெல்லியடி மத்திய கல்லூரி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகள் தகுதி பெற்றுள்ளன.

கிண்ணம் வெல்லும் அணிக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் இரண்டாமிடத்தைப் பிடிக்கும் அணிக்கு ஒரு இலட்சம் ரூபாவும் மூன்றாமிடத்தைப் பிடிக்கும் அணிக்கு 50 ஆயிரம் ரூபாவும் பணப் பரிசாக வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக யாழ். மத்திய கல்லூரி அதிபர் எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண். தயாளன் கலந்து கொண்டார்.

அமரர் இராசதுரை போரால் சிதைந்த யாழ். மத்திய கல்லூரியை மீளக் கட்டியெழுப்பிய பெருமைக்குரியவர். மத்திய கல்லூரியைக் களமாகக் கொண்டு வடமாகாண கல்விக்கும் விளையாட்டுத்துறைக்கும் புத்துயிர் கொடுத்தவர். அவரை நினைவு கூரும் வகையில் இந்த கால்பந்தாட்டப் போட்டியை நடாத்த நாம் முன்வந்தோம் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.


# அலன்ராஜ் அபார சதம் யாழ். மத்தி பெரு வெற்றி



(யாழ்ப்பாணம்)

அலன்ராஜின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 239 ஓட்டங்களால் பெரு வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மற்றும் யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டி கடந்த 7ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி அலன்ராஜின் அபாரமான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 308 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அலன்ராஜ 130 பந்துகளை எதிர்கொண்டு பத்து பவுண்டரிகள் அடங்கலாக 104, கோமதரன் 82 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 12 பவுண்டரிகள் அடங்கலாக 93, கார்த்தீபன் 59 பந்துகளை எதிர்கொண்டு மூன்று சிக்ஸர்கள், பத்து பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரியங்கன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். பதிலுக்கு 309 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணி 28.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் கரன் 18, பிரசாந் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அலன்ராஜ் நான்கு, கோமதரன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி 239 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (எஸ்.பி.)



தென்னாசிய சர்வதேச கராத்தே சங்கத்தால் நடாத்தப்பட்ட கராத்தே போட்டி அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான திறந்த போட்டியில் பருத்தித்துறை தற்காப்பு கலையகத்தின் என். செந்தூரன் தங்கப் பதக்கத்தை வென்றார். தங்கப் பதக்கம் வென்ற செந்தூரன் கராத்தே ஆசான் எம். இரத்தினசோதியுடன் நிற்பதைக் காணலாம். (01)

## இன்றைய ஆட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் நடாத்தி வரும் கனிஷ்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிகள் இன்றைய தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதன் முதற் கட்டப் போட்டிகள் கடந்த ஒரு மாத காலமாக யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்தன.

இன்றைய தினம் 11, 13 ஆகிய வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப் போட்டி, 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

13 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியும் யாழ். மத்திய கல்லூரி அணியும் மோதவுள்ளன.

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

11 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதிப் போட்டி இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியும் சென். ஜோண்ஸ் கல்லூரியும் மோதவுள்ளன. (48)

# அரையிறுதியில் ஆவரங்கால் மத்தி

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடாத்தும் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிக்கு ஆவரங்கால் மத்தி அணி முன்னேறியுள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடர் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான இரு ஆட்டம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

முதலாவது போட்டியில் புத்தூர் கலைமதி அணியும் ஆவரங்கால் மத்தி அணியும் மோதின. ஆரம்பம் முதலே அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆவரங்கால் மத்தி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை பிரதீப் அணியும் ஆவரங்கால் மத்தி அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆவரங்கால் மத்தி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது. ஏனைய போட்டிகள் நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டுச் செய்திகள்

## கிரிக்கெட் சபைத் தலைவர் நீக்கம்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் பதவியில் இருந்து நஜீம் சேதி, பாகிஸ்தான் அரசாங்கத்தினால் நீக்கப்பட்டுள்ளார். ஓய்வு பெற்ற நீதியரசர் ஜெம்ஷேட் அலி ஷா 30 நாட்களுக்கான இடைக்காலத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் தலைமையின் கீழ் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் புதிய யாப்பை உருவாக்கி, புதிய சபைக்கான தேர்தல் ஆணையாளராக கடமையாற்றும் பொறுப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. நஜீம் சேதியின் கீழ் கடமையாற்றிய நிர்வாகசபை புதிய தலைவரின் கீழ் கடமையாற்றும் புதிய யாப்பு மாற்றத்தின் பின்னர் சேதிமீண்டும் தலைவராக வரக்கூடிய வாய்ப்புக்கள் இருக் கின்றன. புதிய யாப்பு மாற்றதில் என்ன விடயங்கள் அடங்கி யுள்ளன என்பதன் படியே அவரின் எதிர்காலம் உள்ளது. மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றால் அவர் தலைவர் பதவியை மீண்டும் பொறுப்பேற்கலாம்.

## விரைவில் சுப்பர்-8 சுற்று

(இளவாலை)

இளவாலை ஹென்றீசியன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் ஹென்றீசியன் பிறீமியர் லீக் கால்பந்தாட்டச் சுற்றுத்தொடரின் விலகல் முறையிலான முதலாம் கட்டப் போட்டிகள் நிறைவடைந்துள்ளன. இவற்றில் வெற்றி பெற்ற எட்டு அணிகள் சுப்பர் - 8 சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சுப்பர் - 8 சுற்றில் அணிகள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு லீக் முறையில் மோதவுள்ளன. இதில் இரு குழுக்களிலும் அதிக புள்ளிகளைப் பெறும் இரு அணிகள் அரையிறுதியில் விளையாடத் தகுதி பெறும்.

இதில் குழு - ஏ இல் மயிலங்காடு ஞானமுருகன், யாழ். பல்கலைக் கழகம், நாவாந்துறை சென்.மேரிஸ், அல்வாய் மனோகரா ஆகிய அணிகள் இடம்பிடித்துள்ளன.

குழு - பி இல் குருநகர் பாடுமீன், ஈவினை கலைமகள், ஆனைக்கோட்டை யூனியன், ஊரெழு றோயல் ஆகிய அணிகள் இடம்பிடித்துள்ளன. வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடர் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (48)

# வலுவான நிலையில் இந்தியா



இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வலுவான நிலையை அடைந்துள்ளது. இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் இங்கிலாந்தின் பிரெண்ட் பிரிட்ஜில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்தது. முரளி விஜய், டோனி இணை சிறிது நேரம் தாக்குப் பிடித்தபோதும் நீண்ட நேரம் களத்தில் நிலைக்கவில்லை. இந்த ஜோடி பிரிக்கப்பட்டத்தைத் தொடர்ந்து இந்திய அணியின் விக்கெட்டுக்கள் இங்கிலாந்து அணியால் வேகமாகச் சரிக்கப்பட்டன. இந்நிலையில் பத்தாவது விக்கெட்டுக்காக இணைந்த புவனேஸ்வர் குமார், மொஹமட் சமி ஜோடி அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்ததுடன் புதிய சாதனையையும் படைத்தது. இறுதியில் இந்த ஜோடி 111 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. கும்ளே, ஸ்ரீநாத் ஜோடி பத்தாவது விக்கெட்டுக்காக 73 ஓட்டங்களைப் பெற்றிருந்ததே இந்திய அணி சார்பாகப் பெறப்பட்ட அதிக ஓட்டங்களாக இருந்தது. இந்தச் சாதனையை சமி, புவனேஸ்வர் குமார் ஜோடி முறியடித்துள்ளது. இறுதியில் இந்திய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 457 ஓட்டங்களைப் பெற்றது. இதில் முரளி விஜய் 146, டோனி 82, புவனேஸ்வர் குமார் 58, மொகமட் சமி ஆட்டமிழக்காது 51 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அண்டர்சன் மூன்று, ஸ்ரூவெர்ட் புரொட் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய இங்கிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை ஒரு விக்கெட்டை இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றோம்சன் ஆட்டமிழக்காது 20 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் மொஹமட் சமி ஒரு விக் கெட்டைச் சாய்த்தார். இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# தீர்க்கமான இறுதிப் போட்டி அம்பாந்தோட்டையில் இன்று

(அம்பாந்தோட்டை)


இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி இன்று அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே, நடைபெற்ற இரு போட்டிகளிலும் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவாக்கியுள்ளன. இந்நிலையில் தொடரைத் தீர்மானிக்கும் இப்போட்டியை வெல்ல இரு அணிகளும் முனைப்புடன் போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையில் இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ், முதல் போட்டியில் நாங்கள் படுதோல்வியடைந்தோம். இருப்பினும் இரண்டாவது போட்டியில் அதற்குப் பதிலடி கொடுத்திருக்கின்றோம். இந்நிலையில் மூன்றாவது போட்டியில் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றிக்கொள்ள இறுதி வரை போராடுவோம். வெற்றியைத் தீர்மானிக்கக்கூடிய நிறைய வீரர்கள் அணியில் இருப்பதால் நிச்சயம் தொடரை வெல்லக்கூடிய வாய்ப்பு எங்களுக்கு இருக்கின்றது. ஆனாலும், தென்னாபிரிக்க அணியை நாங்கள் குறைத்து மதிப்பிடவில்லை எனத் தெரிவித்தார்.

# ஜே.வி.பி.யின் சுயவிமர்சனப் பண்பை கூட்டமைப்பிடம் எதிர்பார்க்க முடியுமா?

– எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.



இலங்கை அரசாங்கம் ஐ.நா. மனித உரிமைக்குழு விசாரணையை நிராகரித்துள்ளது. ஆனால், உலகெங்கும் உள்ள புலி ஆதரவாளர்கள் இந்த விசாரணையை ஆதரிக்கிறார்கள். எனவே, இது அரசாங்கத்திற்கு எதிரான விசாரணை போன்றதோர் தோற்றம் காணப்படுகிறது.

ஆனால், இது போரில் ஈடுபட்ட இரு சாராரும் இழைத்த குற்றங்களை விசாரிக்கும் விசாரணை என்பதை ஐ.நா. அதிகாரிகள் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

2010ஆம் ஆண்டு ஐ.நா. செயலாளர் நாயகத்தால், மர்சூகி தருஸ்மானின் தலைமையில் நியமித்த குழு, ஆறு தலையங்கங்களின் கீழ் புலிகள் தமிழ் மக்களுக்கு இழைத்த குற்றங்களைப் பட்டியல் இட்டிருந்தது.

மக்களைக் கேடயமாக பாவித்தல், தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து தப்பிச் செல்ல முயன்ற சாதாரண மக்களை படுகொலை செய்தமை, மக்கள் தங்கியிருந்த இடங்களிலிருந்து படையினரை நோக்கி போர்த் தளபாடங்களை பாவித்தல், சிறுவர்களை பலாத்காரமாக படையில் சேர்த்தமை, பலாத்காரமாக மக்களை வேலைகளில் அமர்த்தியமை மற்றும் தற்கொலைக் குண்டுதாரிகளை பாவித்து சாதாரண மக்களைப் படுகொலை செய்தமை அவையாகும்.

இவற்றைப் பற்றியும் விசாரணை செய்வதாகவே ஐ.நா. அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆனால், உலகில் பல பாகங்களில் வாழும் புலி ஆதரவாளர்கள் இந்த விசாரணையை ஆதரிக்கிறார்கள். இவற்றை விசாரித்தாலும் அவற்றுக்காக பொறுப்பை சுமந்த புலிகளின் தலைவர்கள் எவரும் இல்லை. இதன் காரணமாகவே புலி ஆதரவாளர்கள் விசாரணையை ஆதரிக்கிறார்கள் என்று ஊகிக்கலாம்.

விசாரணையை இலங்கை அரசாங்கம் நிராகரிக்கிறது என்பதை வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும், ஜெனிவாவில் ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி ரவிநாத ஆர்யசிங்ஹவும் மனித உரிமை பேரவையிடமும் ஊடகங்களிடமும் தெரிவித்துள்ளனர்.

விசாரணைக்கு அடித்தளமாக அமைந்த அமெரிக்கப் பிரேரணை, இலங்கையின் இறைமைக்கும் சுதந்திரத்திற்கும் சவாலாக அமைந்துள்ளதால் தமது அரசாங்கம் இந்த விசாரணையை ஏற்பதில்லை என ஆர்யசிங்ஹ கூறினார். இந்த விசாரணையை ஏற்பதானது நாட்டின் கௌரவத்தைப் பற்றிய பிரச்சினையாகும் என்றார் வெளிவிவகார அமைச்சர்.

அரசாங்கம் நாடாளுமன்றத்தில் பிரேரணையொன்றை சமர்ப்பித்து இந்த விசாரணையை நிராகரித்துள்ளது. இந்தப் பிரேரணை மீதான விவாதத்தின் போது தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமே விசாரணையை ஆதரித்தது. அந்த விவாதத்தின் போது தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மிக முக்கியமானதோர் உரையை ஆற்றினார்.

வரப் போகும் விசாரணை இலங்கைக்கு எதிரானதல்ல. அது மனிதநேய மற்றும் மனித உரிமை சட்டங்களை மீறியோருக்கு எதிரானதாகும். அது வடக்கில் இளைஞர்கள் காணாமற் போனதற்கு எதிரானது போலவே கடந்த காலத்தில் தெற்கில் இளைஞர்கள் காணாமற் போனதற்கும் எதிரானதாகும். இந்தக் காரணங்களால் தமிழ் தேசிய கூட்டமைப்பு இரு சாராரும் தொடர்பான இந்த விசாரணையை வரவேற்கிறது.

எமது பெயரில் இழைக்கப்பட்ட குற்றங்கள் விடயத்தில், திரும்பிப் பார்ப்பதற்கு தமிழ் மக்களுக்கு கிடைத்த சந்தர்ப்பமாக நாம் இந்த விசாரணையைப் பார்ப்பதைப் போலவே இலங்கையில் சகல மக்களிடையேயும் நீதி, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு சந்தர்ப்பமாக அரசாங்கம் இந்த விசாரணையைப் பார்க்க வேண்டும் என நாம் கேட்டுக் கொள்கிறோம் என்றார் சம்பந்தன்.

அவரது இந்த ஆலோசனை அரசாங்கத்திற்கு மட்டுமல்லாது தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் பெரும் சவாலாகவும் அமிலப் பரீட்சையாகவும் அமையப் போகிறது என்பதே உண்மையாகும்.

தமிழ் மக்களின் பெயரில் இழைக்கப்பட்ட குற்றங்கள் விடயத்தில் திரும்பிப் பார்ப்பதற்கு தமிழ் மக்களுக்கு கிடைத்த சந்தர்ப்பமாக இந்த விசாரணையைக் கருதி செயற்பட, உண்மையிலேயே தமிழ் தேசிய கூட்டமைப்பு தயாரா?

2000ஆம் ஆண்டு முதல் தமிழ் கூட்டமைப்பிலுள்ள சகல கட்சிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறி வந்தன. அது மட்டுமல்லாது அக் காலத்தில் தமிழ் மக்களின் பெயரால் புலிகள் புரிந்த எந்தவொரு குற்றத்தையும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் விமர்சிக்கவில்லை.

போர்க் களத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் கொல்லப் படுவதற்கு புலிகள் அம் மக்களை பணயமாகவைத்திருந்தமையே காரணமாகியது. கிழக்கு மாகாணத்தை படையினர் கைப்பற்றும் போது புலிகள் அவ்வாறு மக்களைப் பணயமாக வைத்திருக்காததால் அங்கு அவ்வாறான பாரிய அழிவுகள் ஏற்படவில்லை.

வடக்கில் புலிகள் மக்களை கேடயமாக வைத்திருந்த போது அம் மக்களை விடுவிக்குமாறு தமிழ் கூட்டமைப்பு ஒரு போதும் புலிகளைக் கேட்கவில்லை.

வடக்கில் மக்கள் மீது ஷெல் தாக்குதல்களை நடாத்தும் போது தமது கட்சி அது தொடர்பாக கரிசனை காட்டவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அண்மையில் சுய விமர்சனம் செய்து இருந்தார். அந்த சுய விமர்சனத்தால் இப்போது பயனில்லை என்பது உண்மை தான். ஆனால், அவ்வாறான சுய விமர்சனத்தையேனும் தமிழ் கூட்டமைப்பு செய்யவில்லை.

தமிழ் மக்களின் பெயரில் இழைக்கப்பட்ட குற்றங்கள் விடயத்தில் வரலாற்றைத் திரும்பிப் பார்ப்பதற்கு இந்த சுய விமர்சனம் மிகவும் முக்கியமாகும். ஆனால், அதற்கு தமிழ் கூட்டமைப்பு தயாரா என்பதே கேள்வியாகும்.

அண்மையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு நிர்வகிக்கும் வடமாகாண சபையில் இலங்கையில் மனித உரிமை மீறல் தொடர்பாக பிரேரணையொன்று நிறைவேற்றப் பட்டது. ஆனால் அந்தப் பிரேரணையில் புலிகளின் குற்றங்களை விசாரணை செய்ய வேண்டும் என்ற சாயல் கூட இருக்கவில்லை.

நாளை மனித உரிமை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தினால் விசாரணை ஆரம்பிக்கப் பட்டால் தமிழ் கூட்டமை பு திரும்பிப் வகையில், குற்றங்களை விசார குழு முன் வைக்க தயாரா என்பது சந்தேகமே. அவர்களாக முன்வைப்பது ஒரு புறமிருக்க மற்றவர்கள் முன்வைத்தாலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு அதனை குறைந்த பட்சம் எதிர்க்காமல் இருக்க முடியுமா?

அரசாங்கத்தின் நிலையும் இதே போல் முரண்பாடாகத் தான் இருக்கிறது. விசாரணையை ஏற்றுக் கொள்வது மானப் பிரச்சினை என்று அரசாங்கம் கூறுகிறது. ஆனால், படைகள் பாரியளவில் மனித உரிமைகளை மீறியுள்ளார்கள் என்று உலகம் ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டால் அது மானப் பிரச்சினையாகாதா என்ற கேள்வியும் எழுகிறது.

விசாரணையில் அரசாங்கம் கலந்து கொள்ளாவிட்டால் புலிகள் மீதான குற்றச்சாட்டுகளை சுமத்தவும் ஒருவரும் இருக்க மாட்டார்கள் அதற்காக சாட்சியங்களை முன்வைக்கவும் ஒருவரும் இருக்க மாட்டார்கள்.

---




# “அசைவப் பறவை” யும் “கோழித் துப்பாக்கி” யும்

பறவையைக் கண்டு விமானம் உருவாக்கப்பட்டாலும் சில சமயங்களில் விமான விபத்துக்களுக்கும் பறவைகள் காரணமாகின்றன. (பறவைகளுக்கான வான்வெளியை விமானங்கள் ஆக்கிரமிப்புச் செய்வது சரியா என்பது மற்றொரு அடிப்படைக் கேள்வி) விமானத் துறையில் பறவைகள் மோதலினால் ஏற்படும் பொருளாதார இழப்பு ஆண்டிற்கு ஏறக்குறைய 15,000 கோடி ரூபா!

ஜெட் எஞ்சினில் காற்றை உள்ளிழுத்து அழுத்தமேற்ற காற்றாடிகள் இருக்கும். வீட்டில் நாம் பயன்படுத்தும் காற்றாடியைவிடப் பல மடங்கு வேகமாக இவை சுற்றும். வீட்டிலிருக்கும் மின்விசிறி நிமிடத்திற்கு ஏறக்குறைய 200 சுற்றுகள் சுற்றும். போர் விமான எஞ்சின் காற்றாடி 10,000 சுற்றுகள் சுற்றும். இதனால் தன் முன்னிருக்கும் எதையும் உறிஞ்சிக் கொள்ளும். பறவைகளுக்கான உயரத்தில் விமானம் செல்லும்போது எஞ்சின் பறவைகளை விழுங்கிவிடும். (விமானம் ஓர் அசைவப் பறவை!)

விமானத்தைவிட பறவை மிகச் சிறியதாக இருந்தாலும் விமானத்தின் வேகம் காரணமாக பறவை மோதினால் பலத்த சேதம் நிகழும். விமான விபத்து நிகழும் அபாயமும் உண்டு. பறவை மோதினாலும் பாதிப்படையாத எஞ்சினை உருவாக்குவது விஞ்ஞானிகள் கடமை. இதற்கு எஞ்சினை வடிவமைத்த பிறகு சோதனை செய்து பார்க்க வேண்டும். எப்படி சோதனை செய்வது? எஞ்சினின் காற்றாடியை இயங்க வைத்து பறவைகளை மோத விட வேண்டும். இதற்குப் பறவைகள் ஒப்புக் கொள்ளுமா? பறவைகளுக்கு எங்கே போவது? பிறகு எப்படி விஞ்ஞானிகள் சோதனை செய்கிறார்கள்?

பறவைகளுக்குப் பதில் இறைச்சி போன்ற செயற்கைப் பொருளைப் பயன்படுத்துகிறார்கள். ஜெலட்டின் என்ற உணவு புரதப் பொருளே செயற்கை இறைச்சியாக பயன்படுத்தப்படுகிறது. காகமும் பருந்தும் ஒன்றாக முடியுமா? முடியாது. எனவே பறவையினங்களை ஆராய்ந்து அவற்றின் எடை, இறைச்சி அடர்த்தி ஆகியவற்றை அளந்து, அதற்கேற்ப செயற்கை மாமிசம் தயாரித்து சோதனைக்கு பயன்படுத்துகிறார்கள்.

பறவை பறக்கும். செயற்கை மாமிசம் எப்படிப் பறக்கும்? துப்பாக்கியிலிருந்து குண்டு எப்படி திசைவேகத்தோடு வெளிவருகிறதோ அதைப்போலவே நீண்ட குழல் கொண்ட துப்பாக்கி செய்து அதில் செயற்கை மாமிசத்தை இட்டுச் சுழலும் காற்றாடி மீது எறிந்து சோதனை நடத்தப்படும். இந்தத் துப்பாக்கிக்கு "கோழித் துப்பாக்கி" (chicken gun) என்று பெயர்!

(‘போர்ப் பறவைகள்’ என்ற நூலிலிருந்து)

---



# என்ன ஒரு ஒற்றுமை!

அமெரிக்காவின், லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வசிக்கும் இரட்டைச் சகோதரிகள், ஏமி மற்றும் பெக்கலாஹலால். இவர்கள் இருவருக்கும், 46 வயதாகிறது. இருவரும் தோற்றத்தில் ஒரே மாதிரியாக இருப்பதால், சிறு வயதில் இருந்தே, ஒற்றுமையாக இருக்கின்றனர். ஒருவர் பயன்படுத்தும் பொருளையே மற்றவரும் பயன்படுத்துகிறார். மொபைல் போன், ∴பேஸ்புக் கணக்கு, படுக்கை அறை, உணவு என, அனைத்தையுமே, ஒன்றாக பங்கிட்டுக் கொள்கின்றனர். இதாவது பரவாயில்லை. இவர்கள் இருவருக்கும், ஒரே காதலர் என்பது தான் ஆச்சரியம்! இரண்டு பேரின் உடல் எடையும், ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதற்காக, உணவைக் கூட, சரிபாதியாக பங்கிட்டு தான், சாப்பிடுகின்றனராம்!

# முகத்தில் எண்ணெய் வழிகிறதா?



☯ எண்ணெய்ப் பசை சருமத்தினர், அடிக்கடி முகம் கழுவ வேண்டும். முகத்தை கழுவ சோப்பிற்கு பதில் கடலைமா அல்லது பாசிப்பயிறு மா பயன்படுத்தலாம். இதனால், எண்ணெய் வழிவது கட்டுப்படும்.

☯ வெயிலில் சென்று வீடு திரும்பியதும், சிறிது தயிர், கடலைமா மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவி-னால் அதிகப்படியாக எண்ணெய் வழிவது குறையும்.

☯ மோரை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவலாம்.

☯ தக்காளி பழச்சாறை முகத்தில் தடவி காய்ந்த பின், கழுவினால் எண்ணெய் வழிவது கட்டுப்படும்.

☯ வெள்ளரிக்காய் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, சந்தனத் தூள், பாதாம் பவுடர், தயிர், உருளைக்கிழங்கு சாறு ஆகியவற்றை சம அளவில் எடுத்து அவற்றை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு வாரத்தில் இரண்டு நாட்கள் செய்ய வேண்டும்.

☯ சோள மாவுடன், தயிர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினால், முகத்தின் எண்ணெய்ப்பசை நீங்கும்.

☯ பப்பாசிப்பழ கூழ், முல்தானி மட்டி, வேப்பிலைத் தூள் ஆகியவற்றை நன்றாகப் பசை போல் குழைத்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் இரண்டு முறை செய்தால், முகத்தில் வழியும் அதிகப்படியான எண்ணெய்த் தன்மை குறைந்து முகம் பளபளப்பாக காட்சியளிக்கும்.

▶ கொரிய நாட்டு திருமண ஊர்வலத்தில் கட்டாயம் வாத்துக்களும் கூட்டமாக கலந்து கொள்ளும், இதனால் கணவன்-மனைவி உறவு பலமாக இருக்கும் என்று நம்புகிறார்கள்.


▶ இத்தாலியில் திருமணத்தன்று மணமக்கள் மீது கற்கண்டு, பாதாம்பருப்பை அட்சதையாகத் தூவுகிறார்கள்.

▶ மணமக்கள் நீல நிறத்தில் ஏதாவது ஒரு பொருளை திருமண நாளில் அணிய வேண்டும். அது புதிதாகவும் இருக்கலாம் அல்லது பழையானதாகவும் இருக்கலாம். இது இங்கிலாந்தில் இருந்து வரும் பழக்கம்.


▶ தாய்லாந்து நாட்டில் முதல் இரவு அறைக்குள் தானிய மூட்டை, பணப்பை ஆகியவை வைக்கப்படும். முதல் இரவு படுக்கையை வயதான தம்பதியர் விரிப்பார்கள்.

இவை எல்லாமே அந்தக் காலத்தில் உள்ள பாரம்பரிய பழக்கங்கள் - இந்த அவசரகாலத்தில் எப்படியோ?

# விதவிதமான திருமணங்கள்!



# சுமந்திரனின் வடமராட்சி வண்டிலும்! விக்கியின் தலைமைக் கனவும்!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆங்காங்கே அலுவலகங்கள் திறக்கும் நிகழ்வுகளைத் தொடங்கியுள்ளதன் பின்னால் உள்ள சூத்திரத்தன்மைகள் தொடர்பில் கூட்டமைப்புக்குள்ளிருந்தே புகைச்சல்கள் கசிகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்டத் தலைமைகளாகச் சொல்லப் படுகின்ற இரா.சம்பந்தன், சி.வி. விக்னேஸ்வரன், தேசியப்பட்டியல் சுமந்திரன் ஆகியோரைத் தமிழ் மக்களின் தலைமைகளாகத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு தமிழ் மக்கள் விரும்புகிறார்களோ இல்லையோ சிங்கள அரசாங்கம் விரும்புகின்ற வகையிலேயே குறித்த அரசியல்வாதிகள் மூவரும் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாக உள்ளிருந்து முணுமுணுப்புக்கள் கேட்கத் துவங்குகின்றன.

யாழ்ப்பாணம் நெல்லியடியில் கூட்டமைப்பின் கிளைக்காரியாலயம் ஒன்று திறக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது கேள்வி எழுந்தது. தமிழ் மக்களின் நலன் சார்ந்த எந்தவித ஆரோக்கியமான காத்திரமான செயற்பாடுகளையும் இதுவரையில் முன்னெடுத்திருக்காத கூட்டமைப்பின் தலைமைப்பீடம் திடீரென நெல்லியடியில் ஒரு கிளை அலுவலகத்தினை திறப்பதற்கு முனைந்திருப்பதன் உள்நோக்கம் என்ன என்பது பலரதும் யோசனைக்குள்ளாகியது.

அடுத்த ஆண்டு ஏதாவது ஒரு தேர்தலை நடத்துவது என்பதில் அரசு அக்கறை கொண்டிருக்கின்றது. அந்தத் தேர்தல் ஜனாதிபதித் தேர்தலாகவோ அல்லது பொதுத் தேர்தலாகவோ இருக்கலாம் என்ற குழப்பம் காணப்பட்டாலும் அது பொதுத்தேர்தலாகவே இருக்கக்கூடும் என்று சம்பந்தன் தரப்பு உணர்ந்திருக்கின்றது.

இதன் தொடராக மகிந்த ராஜபக்ஷவின் சிபார்சின் அடிப்படையில் சம்பந்தனால் தேசியப் பட்டியல் ஊடாக கூட்டமைப்புக்குள் புகுந்த சுமந்திரன் தொடர்ந்தும் கூட்டமைப்பின் தலைமைப்பீடத்தில் இருப்பதே எதிர்காலத்தில் இலங்கை அரசு எதிர்கொள்ளும் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கான இலகுவான வழிகளில் ஒன்றாக அமையும் என்பதை அரசும் சம்பந்தன் தரப்பும் நன்குணர்ந்துள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேசியப்பட்டியல் ஊடான சந்தர்ப்பம் இல்லாது போனால் சுமந்திரன் கட்சிக்குள் புகுந்துகொள்ள மாற்று வழி என்ன என்பதை சம்பந்தன் - சுமந்திரன் - விக்னேஸ்வரன் தரப்பு கூடி ஆராய்ந்திருக்கின்றது.

அதன் பலனாக சுமந்திரனை எவ்வாறாயினும் நாடாளுமன்ற உறுப்பினராக்குவது என சம்பந்தன் தீர்மானித்திருக்கிறார். அவரைத் தனது வாரிசாக ஆக்கிவிடுவது என்ற அவரது திட்டத்தின்படி திருகோணமலையில் கிடைக்கக்கூடிய ஒரு ஆசனத்தை சுமந்திரனுக்காக விட்டுக்கொடுப்பதற்கு சம்பந்தன் முடிவெடுத்திருக்கிறார். திருமலையில் உள்ள புத்திஜீவிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மத்தியில் இது தொடர்பிலான நாடித்துடிப்பு பரிசீலிக்கப்பட்டிருக்கின்றது.

அது திருமலை ஆதரவாளர்கள் மத்தியில் பலத்த விசனத்தையும் அதிருப்தியையும் தோற்றுவித்திருக்கின்றது. சம்பந்தனின் மிகத் தீவிர விசுவாசிகளாக அவர் செய்வதெல்லாம் சரி-யென வாதிட்டு வந்த அவருடைய அபிமானிகள் கூட இந்த விடயத்தினை ஏற்க முடியாது என்றும் இதற்கெதிராக கடுமையாக செயற்படப்போவதாக கொதித்தெழுந்திருக்கின்றனர்.

இதேவேளை திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான துரைரட்ணசிங்கமும் போர்க்கொடி தூக்கியிருக்கின்றார். துரைரட்ணசிங்கம் சம்பந்தன் காலத்துக்குப் பின்பாகத் தான் தான் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக வரலாம் என்று அதற்காகக் காத்திருந்தார். ஆனால் சுமந்திரன் திருமலையில் வேட்பாளராவது என்ற செய்தி அவருக்கும் அவர் சார்ந்தவர்களுக்கும் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக தெரிகிறது.

இந்த எதிர்ப்பலைகள் சம்பந்தனைச் சென்றடைந்ததும் சம்பந்தன் தனது அந்த முயற்சியைக் கைவிட்டதாகத் தெரிகிறது.

எனவே சுமந்திரனை எங்கு நிறுத்தி வெல்ல வைப்பது என்று ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. இதனிடையே தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவை ஆலோசிக்காமலேயே இந்த முக்கிய நகர்வுகளை சம்பந்தன் தரப்பு முன்னெடுத்து வருகிறது. மாவை சேனாதிராஜாவை ஒதுக்குவதன் நோக்கம் எதிர்காலத்தில் தமிழரசுக்கட்சியின் தலைமையை விக்னேஸ்வரனுக்கும் செயலாளர் நாயகம் பதவியை சுமந்திரனுக்கு கையளிப்பதற்குமே என்று இள நிலை மாகாண சபை உறுப்பினர்கள் மட்டத்தில் பேசப்படுகிறது.

சுமந்திரனை வடக்கில் நிறுத்தி தேர்தலை எதிர்கொள்வதற்கான ஆலோசனையை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனே முன்வைத்ததாகவும் சொல்லப்படுகிறது. இரணைமடு நீர் விநியோக விவகாரத்தில் முட்டிக்கொண்டாலும் தற்போது விக்னேஸ்வரனின் மிக மிக நம்பிக்கைக்கும் அபிமானத்துக்கும் உரிய நபராக சிறிதரன் மாறியிருக்கிறார்.

இந்த நிலையில் வடக்கில் எந்தப் பகுதி மக்களை ஏமாற்றி சுமந்திரனை வெற்றி பெற வைக்கலாம் என்று தமிழரசுக்கட்சியின் சம்பந்தன் தலைமையிலான குழு தீவிரமாக ஆராய்ந்ததன் அடிப்படையில் வடமராட்சியை இலக்குவைப்பதென தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

வடமராட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இல்லை என்பதால் அதனைச் சொல்லி வடமராட்சி மக்களை ஏமாற்றுவது என்பது ஒன்று, இரண்டாவது தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் பிறந்த மண்ணில் வெல்வதன் மூலம் எதிர்காலத்தில் சர்வதேசத்திற்கு காதில் பூ சுத்துவதற்கு, தலைவர் பிறந்த மண்ணில் வென்ற சுமந்திரன் கண்கட்டி வித்தை காட்டுவார்.

எடுக்கப்பட்ட இந்த நிலைப்பாட்டினால் ஒரு சில மாகாண சபை உறுப்பினர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கனவில் மண் விழலாம் என்றும் தெரிகிறது. வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களின் வாக்குகளை முழுமையாகச் சூறையாடுவதே சுமந்திரன் தரப்பின் உள்நோக்கம்.

இதனிடையே வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்களில் ஒருவரான சுகிர்தனை எதிர்காலத்தில் அந்த மண்ணின் அரசியல்வாதியாக மாற்றுவதற்கு அவரது ஆர்வலர்கள் சிலர் முயற்சித்து வருவதாகவும் அதற்குப் பிரதானமாக தேசியப் பத்திரிகையின் பிராந்திய அலுவலகம் ஒன்றின் உயர் நிலையில் உள்ள ஒரு-வரும் முனைப்புக் காட்டிவருவதாக அறிய முடிகிறது.

இந்நிலையில் சுகிர்தனுக்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டால் அது சுமந்திரனுக்கு ஆப்பாக மாற-லாம் என்று சக மாகாணசபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சியிலிருந்து சாவகச்சேரி வரை நடைபெற்ற மேதின ஊர்திப் பவனியில் சுமந்திரன் ஒரு வண்டிலில் தனியாகப் பயணித்தது எதற்காக? இதுவே உள்வட்டத்தினரின் சந்தேகத்திற்கான விதை.

எது எவ்வாறோ எமது மக்களை ஏமாற்றி குறிப்பாக கல்வியில் சிறந்தவர்களாக காலாகாலமாக மதிக்கப்படுகின்ற வடமராட்சி மண்ணின் மக்களை ஏமாற்றி வாக்கினைப் பெற்று அரியாசனம் ஏறக் காத்திருக்கும் சுமந்திரன் அந்த மக்களுக்கே வண்டில் விட்டு தமிழினத்துக்கு தொடர்ந்தும் குழி பறிப்பார் என்பது மட்டுமே பட்டவர்த்தனம்.

(நன்றி:- தமிழ்லீடர்)

## மாற்றம் வேண்டும் இது மக்கள் முரசு




## நாட்டியமாடுறான் பாவம் நம்மூரான்



அப்பாற்பட்ட சக்திக்கு ஓர் ஆராதனை போதாதா? ஐயோ!..
ஆண்டவன் பெயரில் என்னவெல்லாம் செய்யுறாங்க!...
பட்டினியால் வாடுது பாவிகள் வயிறு பல்லாயிரம் செலவில்
பாலாபிஷேகம் செய்யுறாங்க!...
ஆயிரம் லச்சமாம் தேர் முடியெழுப்ப ஆறாது தவிக்குது
அந்தப்பட்டினி வயிறு
ஆண்டவன் சொன்னானா?..அல்லது அறிவாளிதான்
சொன்னானா?...
நாலு பவுண் சங்கிலி நம் கழுத்திலாட
நாலு கூட்ட மேளமாம் ஊருக்குள் நம் பெயர் சொல்ல
நாட்டியமாடுறான் பாவம் நம்மூரான்.

துவாரகன் சங்கானை

## பாஸ் இல்லையாம்



அனல் கொழுத்தும் வெய்யிலில் பார்வை
யாளர் துடிக்கிறார்கள்

ஆஸ்பத்திரியில் செக்குரூட்டியின் அனுமதியில்லையாம் – ஏன் தெரியுமா?

பாவம் அவரிற்கும் பாஸ் இல்லையாம்

அப்ப இதுக்கு முடிவேயில்லையா?........

அவர்களும் வந்து அடுத்த நாள் கட்டிலில் படுக்கட்டும்

இதுதான் முடிவு?..... மதி

கிளிநெச்சி


## ஜாதி இது நியாயமா?



கள்ளுக்கடைக்
கொட்டிலில் கடனிற்குக்
குடித்துவிட்டு ஜாதி மத
பேதமின்றி சமரசமாய்ப்
பேசியவர்க்ள் சாலையில்
செல்லும்போது சாதி
குறைந்தவனென்றல்ல
சாடுகின்றனர்
அவனை!...இது ந

அனுசா
சாவகச்சேரி

## குதிரைக்கு ஏன் கொம்பு கொடுக்கவில்லைத்•தெரியுமா? குணமறிந்து தான்




உயிருக்கு உத்தரவாதம் தேடி ஊரூராய் அலைந்த தமிழன்
இன்று உயிர்பலி யெடுக்க வாளேந்தி நிற்கிறானாம்.

ரூபன் – அளவெட்டி

## எதுக்கு வீணா இடிச்சுக் கட்றாங்க?...

ஆண்டுக்கு ஒரு முறை
ஏனண்ண ஆலயங்களை
இடிச்சுக் கட்றாங்க
இடிச்சாத்தான்
கட்டலாமாம் இல்லாட்டி
இன்கம்ரக்ஸ் கட்டோணுமாம்.
அப்ப அண்ண இருக்கிற
காசுக்கு ஏதாவது
அறக்கொடை ஆரம்பிக்கலாம்
தானே!
அப்படிச் செய்தா
ஆண்டவனை துரத்த
முடியாதாம்.

சுபீட்சா
நுணாவில்






**அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் ஐவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.**

### சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- பு.யதுர்சனா
தரம் :- 10
பாடசாலை:- யா/ எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேச வித்தியாலயம்.


பெயர் :- சி.சுபர்ணா
தரம் :- 5
பாடசாலை:- யா/ வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.

பெயர் :- ஈ.சுமன்ராஜ்
தரம் :- 8
பாடசாலை:- கிளி/ பாரதி வித்தியாலயம்.

பெயர் :- க.துளசிகா
தரம் :- 7
பாடசாலை:- கிளி/ பாரதி வித்தியாலயம்.


பெயர் :- ச.ஜதுசன்
தரம் :- 7
பாடசாலை:- யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.

01.



(i) (ii) (iii)


02.



(i) (ii) (iii)

* கீழே தரப்பட்ட அமைப்பு இரண்டு கூட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளன அதில் சரியாக பிரிக்கப்பட்ட கூட்டம் எதுவெனக் கண்டு கீறிடுக.

03.



A B C D E F

(i) A , F (ii) B , C (iii) D , F

05.07.2014 வெளியான புதிர்ப்போட்டியின் விடைகள்

1) (1, 3) 3) iv 5) iii
2) 3, 5) 4) ii

**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி
இல: ------- 373,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

# தனிநாயகம் அடிகளாரின் நினைவு முற்றம் அமைக்கும் வேலைகள் துரிதகதியில்

யாழ். நகரில் உள்ள மடத்தடி யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலைக்கு அருகில் உள்ள அரச மரத்தின் கீழ் தனி நாயகம் அடிகள் நினைவு முற்றம் அமைக்கப்படும் வேலைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. தனிநாயகம் அடிகளாரின் பிறந்த தின்மாகிய எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்ப்பாண தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து முன்னெடுக்கும் விழாவில் யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் இணைந்து தனிநாயகம் அடிகளின் திருவுருவச் சிலையைத் திறந்து வைக்கவுள்ளனர்.

தனிநாயகம் அடிகள் நினைவு முற்றம் அமைப்பது தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினருக்கும் யாழ். மறை மாவட்டத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தனிநாயகம் அடிகளாரின் சிலை திறப்புத் தொடர்பாக ஆராயப்பட்டது. சிலை அமைப்பிற்கான பெரும் நிதிப்பங்களிப்பை கனடாவில் உள்ள நெடுந்தீவு ஒன்றியத்தினர் வழங்கியுள்ளனர். சென். பற்றிக்ஸ் சூழலில் உள்ள திருநகரைச் சேர்ந்த சிற்பி சி.ஜெயசீலன் (பாபு) தனிநாயகம அடிகளாரின் உருவச் சிலையை வடிவமைத்துள்ளார். 6 அடி 3 அங்குல உயரத்தில் நின்ற நிலையில் இச்சிலை ஆக்கப்பட்டுள்ளது.



சிலை திறப்பு விழாவைத் தொடர்ந்து திருமறைக் கலாமன்ற கலைதூது அழகியற் கல்லூரி மண்டபத்தில் தனிநாயகம் அடிகள் நினைவுச் சொற்பொழிவு இடம் பெறும். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க உபதலைவர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி நினைவுரையை ஆற்றுவார். நிகழ்விற்காக தனியான அழைப்பிதழ்கள் அனுபுவதில்லை எனவும் தமிழியல் ஆர்வலர்கள் யாவரும் இதில் பங்கேற்க முடியும் எனவும் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. பங்கேற்பவர்கள தனிநாயகம் அடிகளாருக்கு மலர் வணக்கம் செய்வதற்கான சந்தர்பபமும் வழங்கப்படவுள்ளது. (63)

## தனியார் போக்குவரத்து தொடர்பாக ஒழுங்கமைப்பு கருத்துக்கணிப்பு

தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சினால் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து சேவைகளை ஒழுங்கமைத்தல் தொடர்பாக மக்களிடம் கருத்துக்கணிப்பிடப்பட வுள்ளது.

இதன் நோக்கம் தேசிய கொளகையை வகுத்து சேவைகளை சீராக்குதலாகும். இதற்காக அமைச்சின் செயலாளர் உட்பட 14 பேர் அடங்கிய குழுவை தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க நியமித்துள்ளார்.

இக்குழுவின் அறிக்கை இம்மாதம் 31ஆம் திகதி சமர்பிக்கப் படவுள்ளதாகவும் மக்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எதிர்வரும் 20 ஆம் திகதிக்குமுன் பொது மக்களும், அமைப்புக்களும் செயலாளர், தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு இல. 34, நார ஹேன் பீற்றி வீதி, நாவல என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும் இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 0112807292, என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளலாம். (105)

## பாக்கு விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு சந்தைகளில் தற்போது பாக்குவிலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. நானூறுரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒருகிலோ பாக்கு தற்போது 600 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. அது மட்டுமல்லாது வியாபாரிகளிடம் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தற்போது பாக்குக் காணப்படுகிறது. (150)

## அலங்கார உற்சவம்

இருபாலை கிழக்கு மண்டாக குளம் பதி அருள்மிகு நாச்சிமார் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம், கடந்த புதன் கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இந்த உற்சவம் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெற வுள்ளது. தினமும் மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று, 7.30 மணிக்கு அம்பாள் வீதியுலா இடம்பெறுகிறது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நாகலிங்க உற்சவமும், 18ஆம் திகதி வெள்ளி மு.ப. 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம பெறவுள்ளன.

ஆலயப்பிரதமகுரு, கும்பாபிஷேக கிரியாரத்தினம் சிவஸ்ரீ. த.ரவீந்திரராசாக் குருக்கள் தலைமையில் உற்சவக்கிரியைகள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (06)

## "சமூக ஒருமைப்பாட்டு வாரம்" யாழ். குடாவில் அனுஷ்டிக்க ஏற்பாடு

தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சினால், சமூக ஒருமைப்பாட்டு வாரம் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை யாழில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் செம்மி விக்கிரமசிங்க நேற்று முன் தினம் வியாழககிழமை தெரிவித்தார்.

இவ்வாரத்தினை முன்னிட்டு, எதிர்வரும் 19 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலகத் திற்குட்பட்ட தும்பளை கிழக்கு கடற்கரையில் மாலை 4 மணிக்கு பட்டம் விடும் விழா நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ், சிங்கள கலாசாரத்தினை பலப்படுத்தும் நோக்கத்துடன், மொழி பரிமாற்றம் மற்றும் உணவுப்பரிமாற்ற நிகழ்வுகளும் நடாத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

உணவுப் பரிமாற்றத்தின் போது சிங்கள கலாசாரத்தின் உணவுகளும், தமிழ் கலாசார உணவு வகைகளும் காட்சிப்படுத்தப்படவுள்ளதாகவும், அவர் மேலும் கூறினார். (25)




கோப்பாய் கிறிஸ்த்தவக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தமிழ் விழாவில் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பத்திராதிபரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப் பதிவாளருமாகிய இ.சர்வேஸ்வரா பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (48)

## வாரம் ஒரு காரம்



## ரமபோஷா தமிழர்க்கு சமபோஷா தருவாரா?

திரிபோஷாவில் உருவான ஊட்டச்சத்து தமிழர்க்கு சமபோஷாவில் வந்து நிற்கிறது. எரிக் சொல்ஹெய்மில் இருந்து உலகத்தலைவர்கள் பலர் பலதடவைகள் தலையிட்டும் கூட, இலங்கையில் இந்தச் சிறுபான்மையினருக்கான தீர்வு எதுவும் இதுவரை கை கூடவில்லை.

இந்த தென்னாபிரிக்கா புதிதாக வந்து எதைச் சாதிக்கப்போகிறது என அலுத்துக்கெ ர்ளும் ஒருசாராரும், மறுபுறத்தில் இலங்கையரசுக்கு பலவழிகளில் இறுக்க நிலை ஏற்பட்டு விட்டது. தற்போது வேறு வழியில்லை இந்த மத்தியஸ்தத்துடன் கூடிய தீர்வினை தமிழர்களுக்கு வழங்கியே ஆகவேண்டும் இந்தத் தடவை இது வெற்றியளிக்கும், ஓர் வெளிச்சம் எமக்கு வரும் என வாதிடுவோரும் உளர்.

இதற்கு அப்பால் சென்று இதை மறுத்து வாதிடும் வேறொரு சாரார் ஜே.ஆரில் இருந்து சந்திரிக்கா வரை சர்வதேசத்திற்கு தலையாட்டிய அரசுகள் கூட மத்தியஸ்தத்தை மதிக்கவில்லை ஐ.நாவையே எதிர்த்து நிற்கும் இந்த அரசுக்கு இந்த தென்னாபிரிக்கா எல்லாம் ஓர் தூசு எனக் கூறுவோரும் உளர்.

இவ்வாறான ஓர் எதிர்பார்ப்பு மலிந்த ஓர் அரசியல் காலமாக தற்காலத்தை உருவாக்கி வைத்துள்ளன ஊடகங்கள்.

குடாநாட்டு வியாபார ஊடகங்கள் ஒன்றைப் பத்தாக்கி பத்தை நூறாக்கி பத்திரிகையைப் பார்க்கும் மக்களைப் பதறவைப்பதுதான் இவர்களின் விற்பனை யுத்தியாகும். ஆனால் உண்மைஅதுவல்ல. உலகநாடுகள் எவை தலையிட்டாலும் இலங்கையரசே இங்கு வாழும் தமிழர்க்கு தீர்வு தரவேண்டும்.

இனவாதத்தை முன்நிறுத்தி இலங்கையரசு தமிழர்களுக்கான தீர்வினைத் தள்ளிப்போட்டால் அதைத் தடுக்க எவராலும் முடியாது. இதேபோன்று தமிழர் தரப்பும் சுயலாபத்திற்காக சுதந்திர தீர்வுகளை திசைமாற்றிக் கொண்டிருந்தால் அதைத்தடுக்க எவராலும் முடியாது.

இலங்கைக்குள்தான் தீர்வு உள்ளது. இதைமறந்து செயற்படுகின்றோம். சுத்திச் சுத்தி சுப்பற்ற கொல்லைக்குள்தான் இறுதியில் வந்து நிற்போம் இருந்து பாருங்கள். சுத்துகின்ற போது ஏற்படுகின்ற முரண்பாடுகள்தான் சுப்பற்ற கொல்லைக்குள் வந்தபின்பும் தீர்வினை திசை மாற்றப்போகின்றன. இதுவரை திசைமாறிய தமிழர்களின் தீர்வுகளுக்கு இதுவே அடிப்படைக் காரணம்.

குடாநாட்டு மக்கள் உட்பட உலகத்தமிழர்களுக்கு ஐ.நா. விசாரணை தொடர்பாகவும் அதிகளவு நம்பிக்கை ஊட்டப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையரசு வேறொரு துருவத்தில் இதை முறையடிக்க முனைகிறது. அதாவது சீனா, மற்றும் இந்திய மத்திய அரசு உட்பட்ட பலவேறு நாடுகளின் உறவாடல்கள் மூலம் சர்வதேச உறவினை மறுபுறத்தில் வலுப்படுத்தி வருகின்றது. இதனைத் தாண்டி ஐ.நா. தலையிட முடியாத ஓர் நிலையினை உருவாக்க இலங்கைஅரசு முனைகிறது. இஸ்ரேல் மீது பல பிரேரணைகளை ஐ.நா. நிறைவேற்றியும்கூட, ஐ.நாவால் எதைச் சாதிக்க முடிந்தது.?...

இதற்கு காரணம் இஸ்ரேலின் அமெரிக்க பலம், ஐ.நா.மனித உரிமையகம் என்பது வேறு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் இலங்கை உறவு நிலை என்பது வேறு. விசாரணை என்பது ஐ.நா.வின் பணி இதற்கப்பால் நடவடிக்கை எடுப்பது நாடுகளின் இறைமை நிலை. இலங்கை அரசு நடவடிக்கைக்கான வேலியை பலமாகப் போடுகிறது. இதனால் விசாரணையை துணிச்சலாக நிராகரிக்கின்றது.

இதை உணராத எமது ஊடகங்களும் அற்பத்தனமான கூட்டமைப்பு அரசியல்வாதிகளும் ஐ.நா. விசாரணையை வைத்துப் படங் காட்டி மீண்டும் முரண்பாடுகளை சிறுபான்மை மக்கள் சார்பாக அரசுக்குத் தூண்டி விடுகின்றனர்.

தமிழ்த்தேசிய உணர்வு என்பது எமக்கும் உள்ளது. எல்லாருக்கும்தான் உள்ளது. அதைவைத்து அரச எதிர்ப்பை ஆதாரம்காட்டி ஆயிரம் கட்டுரைகள் எழுதலாம். மார்பு தட்டும் எங்கள் மக்களும் பார்த்து ரசிப்பார்கள். அதனால் என்ன பயன்? யதார்த்தத்தை யார் மக்களுக்கு புரியவைப்பது?

இலங்கையரசின் தவறுகளைச் சுட்டிக்காட்டி இறுமாப்புக் காட்ட இங்கு எமக்கு என்ன பலம் உள்ளது. தற்போது தமிழர்களுக்கு தேவையானது சாதுரியம்தான். சாதுரியமாக இலங்கையில் தீர்வினை பெற்றெடுக்கும் அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுப்பதே இலங்கைத் தமிழர்களின் இனிவரும் பலமாகும்.

# டெங்கு ஒழிப்பு தொடர்பாக செயலகத்தில் கலந்துரையாடல்



டெங்கு ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ் மாவட்ட செயலகத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நேற்று முன்தினம் பி.ப 3 மணியளவில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் கருத்து தெரிவித்த யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் - இக்கோடையில் டெங்கு வேகமாகப் பரவி வருவது பெரும் சிக்கலை ஏற்படுத்தி உள்ளது. இதனை ஆரம்பத்திலேயே தடுக்கும் முகமாக இம்மாதம் ஜூலை 7 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியினை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப் படுத்தியுள்ளோம்.

இதனடிப்படையில் பிரதேச செயலாளர்கள்- மாவட்ட வைத்திய அதிகாரிகள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் அனைவரும் இணைந்து இந்த டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் பாரிய முன்னேற்றங்கள் கண்டுள்ளோம் அனைத்து இடங்களிலும் டெங்கு ஒழிப்பை செயற்படுத்துகின்றோம். இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக மிகவிரைவில் டெங்குவைக் கட்டுப்படுத்த இயலும் என எதிர்பார்க்கின்றோம் என்று தெரிவித்தார். இக்கலந்துரையாடலில் பிராநதிய சுகாதார சேவைகள் பணிபபாளர் கேதீஸ்வரன், சுகாதார வைத்திய அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள்- இராணுவ உத்தியோகத்தர்கள், பிரதேச சபையின் செயலாளர்கள் மற்றும் தவிசாளர்கள், திணைக்களத்தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## குரங்கு பாய்ந்ததால் ஆசிரியையின் கை முறிந்தது

யாழ். மண்டுவில் சோலை யம்மன் கோவில் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஆசிரியை ஒருவர் மீது குரங்கு பாய்ந்ததால், குறித்த ஆசிரியை நிலைகுலைந்து கீழே விழ்ந்து படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீசாலை மேற்கைச் சேர்ந்த ஈழநேசன் புனிதகுமாரி (வயது 52) என்ற ஆசிரியையே இவ்வாறு படுகாயமடைந்தார்.

கீழே வீழ்ந்ததால் இவரது ஒரு கை முறிந்துள்ளது.

இதேவேளை சாவகச்சேரி, மீசாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிளொன்றும் முச்சக்கரவண்டியொன்றும் நேருக்குநேர் மோதியதால் இயற்றாலையைச் சேர்ந்த சின்னத்துரை தெய்வேந்திரம் (வயது 62) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த புதன்கிழமை அனுமதிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

# சமூக, நீர்சேவைகள் குறித்து சர்வதேச மாநாடு கண்டியில்

(கொழும்பு)

சமூகம் மற்றும் நீர் சேவைகள் சம்பந்தமாக 3 ஆவது சர்வதேச மநாடு 2014 கண்டியில் எதிர்வரும் ஆகஸ்ட் 22ஆம் 24 ஆம் திகதி வரை நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவின் தலைமையில் நடாத்த உத் தேசிக்கப்பட்டுள்ளது.

இதில் இப்பிராந்திய நாடுகளான இந்தியா, பங்களதேஷ், பாக்கிஸ்தான, நேபாளம், பூட்டான், ஆப்கானிஸ்தான், மற்றும் மாலை தீவுகள் பங்கேற்கும் என எதிர் பார்க்கப்புடுகிறது.

சமூகங்களிடையே புரிந்துணர்வு, நீர்பங்கிடுதல், சிறந்த நீர் முகாமைத்துவம், ஒத்துழைப்பு போன்றவற்றை முன்னேற்றுவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

பல்வேறு சமூகங்களை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள், கொள்கை வகுப்பாளர்கள், ஆ[illegible]ய்ச[illegible], கல்வி மான்க[illegible] முகவர்கள், விருத்தி மு[illegible] யோர் அடங்கிய பிரதிநிதிகள் 500 பேர் இதில் பங்கேற்பார்கள்.

மேற்கூறிய தகவலை [illegible] விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

# 46 இலங்கை மீனவர்கள் ஆந்திராவில் விடுதலை

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 46 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஆந்திராவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 மீனவர்களும், ஒரிஸ்ஸாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 5 மீனவர்களும் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைசசரின் ஊடக இணைப்புச் செயலாளர் நரேந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த மீனவர்கள் அனைவரும், அந்த பிராந்தியங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளின் பிரகாரம் அபராதம் விதிக்கப்பட்ட பின்னரே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களுக்கு சுமார் 25 ஆயிரம் ரூபா வீதம் நீதிமன்றத்தினால் அபராதம் விதிக்கப்பட்டிருந்ததாக அமைச்சின் ஊடக இணைப்புச் செயலாளர் தெரிவித்தார்.

இதுதவிர இரண்டு மாநிலங்களிலும் இலங்கை மீனவர்களின் 9 படகுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், இந்த மீனவர்கள் நல்லெண்ண அடிப்படையிலன்றி, மாநிலங்களில் முன்னெடுக்கப்பட்ட நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொண்ட பின்னரே விடுதலை செய்யப்பட்டதாக நரேந்திர ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## தனியார் பேருந்துகள் குறித்து முறையிட தொலைபேசி வசதி

(கொழும்பு)

தனியார் பேருந்துகள் தொடர்பான முறைப்பாடுகளை செய்வதற்காக புதிய தொலைபேசி இலக்கம் மற்றும் ஸ்கைப் வசதிகளை தனியார் போக்குவரதது அமைச்சு அறிவித்துள்ளது.

0716550000 என்ற அவசர தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு தனியார் பேருந்துகளின் முறைகேடுகள் குற்றச்சாட்டுகள் தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும் இதேபோன்று பிரைவேட் (private transport services) என்ற ஸ்கைப் விலாசத்திற்கு அல்லது mprivatetransport@gmail.com என்ற ஈமெயில் ஊடாகவும் தொடர்பு கொண்[illegible] முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியுமென அமைச்சு அறிவித்துள்ளது.


பயணிகளினால் செய்யப்படும் முறைப்பாடுகளில் போதுமான தகவல்கள் இல்லாத காரணத்தினால் அவை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு முடியாமல் உள்ளது.

எனவே, முறைப்பாடுகள் செய்யும் போது வாகனத்தின் இலக்கம், வழி இலக்கம், நேரம் போன்றவை தெளிவாக அறிவிககப்படவேண்டும். விசாரணைகளை நடாத்துவதற்கு இது ஏதுவாக அமையும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.



இலங்கைக்கான பிரதி இந்திய உயர் ஸ்தானிகராக அரிந்தம் பக்சி நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் இந்திய வெளிவிவகார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது

## செல்வச்சந்நிதி சந்தியில் ஆட்டோ - பேருந்து மோதல்



செல்வச்சந்நிதிக்குச் செல்லும் வழியில் உள்ள நாவலர் சந்தியில் ஆட்டோவும், தனியார் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை 9 மணியளவில செல்வச்சந்நதிக்குச் சென்று திரும்பிய ஆட்டோவும் உடுப்பிட்டியில் இருந்து வந்த பேருந்தும் நேருக்குநேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது ஆட்டோ சாரதியான மார்க்கண்டு தரன் (வயது 35) என்பவர் தலையில் பலத்த காயத்துடன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (18)

# நுகர்விற்கு உதவாது கலப்படம் 30000 கிலோ பேரீந்து பறிமுதல்



(கொழும்பு)

கொழும்பு, ஒருகொடவத்தை பகுதியிலுள்ள களஞ்சியமொன்றிலிருந்து நுகர்விற்கு உதவாத 30,000 கிலோ கிராம் பேரீச்சம்பழத் தொகை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நுகர்விற்கு உதவாத பேரீச்சம் பழங்கள் சந்தையில் காணப்படுவதாக கிடைத்த முறைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்தே சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் பிராந்திய விவகாரங்களுக்கான உதவிப் பணிப்பாளர் அசேல பண்டார குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட களஞ்சியசாலையை சுற்றிவளைத்த சந்தர்ப்பத்தில், நுகர்விற்குதவாத பேரீச்சம்பழங்கள் மற்றும் புதிய பேரீச்சம் பழங்களை கலந்து பத்து கிலோ கிராம் வீதம் பொதியிடப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான பேரீச்சம்பழத் தொகை கைப்பற் றப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் பிராந்திய விவகாரங்களுக்கான உதவிப் பணிப்பாளர் கூறினார்.

களஞ்சியசாலையின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.


# க.பொ.த. (சா/த) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (O/L) Examination model Paper

**கணிதம்** **பத்திரம் I** **பகுதி A**

1) குறித்த உணவு வகை ஒன்றின் 100 கிராமிலிருந்து கிடைக்கும் சக்தியின் அளவு 500 கலோரி ஆகும். அதே உணவு வகையின் 30 கிராமிலிருந்து கிடைக்கும் சக்தியின் அளவு எத்தனை கலோரி?

2) x = 2 எனின், $(x-1) + \frac{1}{3}(x-1)$
x இன் பெறுமானத் தைக் காண்க.





3) உருவில் LMN ஒரு நேர்கோடு $PMQ = 50^0$ ஆகும்
x இன் பெறுமானத் தைக் காண்க.

4) x, y, z என்னும் எண்கள் முதன்மைக் காரணிகளின் பெருக்கங்களாகக் கீழே தரப்பட்டுள்ளன.
x = 2x 2x3
y= 2x2x5,
x =2x2x2x2
x,y,z ஆகிய எண்களின் பொதுக் காரணிகளுள் பெரியதை எழுதுக.

5) தீர்க்க $(3x + 5) - (x-1) = 2$

6) சுருக்குக $\frac{2}{3} - \frac{1}{5} + 1\frac{2}{5} \div 1$




7) சுருக்குக 0.22 x 15


8) தரப்பட்டுள்ள வட்டத்தின் மையம் O ஆகும். உருவில் காட்டப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்ப ஆகவும் நீளமான நாண் யாது?

9) $l = a + (n-l)\,d$ என்னும் சூத்திரத்தில் n ஐ எழுவாயாக்குக.

10) குறித்த பணத்தொகை ஒன்றை A யிற்கும் B யிற்குமிடையே 4:7 என்னும் விகிதத்தில் பிரித்தபோது B யிற்கு ரூ. 105 கிடைத்தது. A யிற்குக் கிடைத்த தொகையைக் காண்க.


11) ஒழுங்கான குவிவுப் பல்கோணி ஒன்றின் அகக்கோணம் ஒன்றின் பெறுமானம் $135^0$ ஆகும். அப்பல்கோணியின்,
i) பக்கம் ஒன்றை நீட்டும்போது உண்டாகும் புறக்கோணம் ஒன்றின் பெறுமானம்.
ii) பக்கங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் காண்க.

12) செய்தித்தாள் ஒன்றிலே விளம்பரம் ஒன்றை வெளியிடுவதற்கு முதல் 15 சொற்களுக்கு ரூ. 22.50 உம் அதற்குக் கூடுதலான ஒவ்வொரு சொல்லுக்கும் ரூ.2.50 உம் அறவிடப்படுகின்றன. 20 சொற்களைக் கொண்ட விளம்பரம் ஒன்றை வெளியிடக் கொடுக்கவேண்டிய தொகையைக் காண்க.




13) உருவில் உள்ள தரவுகளுக்கு ஏற்ப ADB யைக் காண்க.


14) தரப்பட்டுள்ள உருவிலே BDC ஒரு நேர்கோடு. முக்கோணி ABD யின் பரப்பளவு $6\ cm^2$ ஆகும். BD = 2 cm, DC = 4 cm எனின், முக்கோணி ABC யின் பரப்பளவைக் காண்க.




$\frac{2}{2x-3} - \frac{1}{x}$

15) சுருக்குக.


16) உருவிலே முக்கோணி PQR இல் உள்வரைந்த வட்டம் முக்கோணியின் பக்கங்களை X,Y,Z என்னும் புள்ளிகளிலே தொடுகின்றது. PX=3cm, XQ=5 cm, RZ=7cm எனின், முக்கோணி PQR இன் சுற்றளவைக் காண்க.




17) $531_{\text{எட்டு}}$ என்னும் எண்ணை அடி இரண்டில் எடுத்துரைக்க

18) $x^2+bx+25$ என்னும் கோவை நிறைவர்க்கமாவதற்கு b கொண்டிருக்க வேண்டிய பெறுமானத்தைக் காண்க.


19) குறுக்குவெட்டு ஒரு செங்கோண முக்கோணியாகவுள்ள செவ்வரியம் ஒன்று உருவில் காட்டப்பட்டுள்ளது. அதிலே தரப்பட்டுள்ள தகவல்களுக்கு ஏற்ப அரியத்தின்
i) குறுக்குவெட்டின் பரப்பளவு,
ii) கனவளவு ஆகியவற்றைக் காண்க.




20) குறித்த எண்ணிக்கையான செங்கற்களை லொறி ஒன்றில் ஏற்றுவதற்கு நாலு மனிதர்களுக்கு 3 மணித்தியாலம் எடுக்கின்றது. அதே எண்ணிக்கையான செங்கற்களை 2 மணித்தியாலத்தில் ஏற்றி முடிப்பதற்கு எத்தனை மனிதர்கள் தேவை?

21) தரப்பட்டுள்ள உருவிலே ABE யும் DCE யும் இயல்பொத்த முக்கோணிகள்

AB =8cm
AE = 6 cm
ED = 9 cm
எனின், CD யின் நீளத்தைக் கணிக்க.





22) 35 சென்ரிமீற்றர் விட்டமுள்ள சில்லு ஒன்று 10 சுற்றுக்கள் உருண்டது. அச்சில்லு உருண்ட தூரத்தைக் காண்க.
(ஆரை r ஐ உடைய வட்டம் ஒன்றின் பரிதி $= 2\pi r$ ஆகும் $\pi = \frac{22}{7}$ எனக்கொள்க)


23) பாத்தி ஒன்றில் உள்ள 10 மிளகாய்ச்செடியிலிருந்து குறித்த நாள் ஒன்றில் பிடுங்கிய மிளகாய்களின் எண்ணிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன.
16, 9, 3, 16, 6, 22, 13, 24, 9, 9
இப்பரம்பலின்
(i) ஆகாரம்,
(ii) இடையம் ஆகியவற்றைக் காண்க.

24) பொருள் ஒன்றை விற்கும்பொது குறித்த விலையில் 12% கழிவு கொடுக்கப்படுகின்றது. அப்பொருளின் குறித்த விலை ரூபா 450 எனின், அதன் விற்பனை விலையைக் காண்க.


25) 8 cm விட்டமுள்ள கோளம் ஒன்று சமதள மேசை ஒன்றின் மீது ஒரு நேர்கோடு வழியே உருட்டப்படுகின்றது. கோளத்தின் மையத்தின் ஒழுங்கைத் தெளிவாக விவரிக்க.




26) உருவில் காட்டப்பட்டுள்ள நேர்கோடு AB யின் படித்திறனைக் காண்க.





27) A,B என்பன தேசப் படம் ஒன்றில் குறிக்கப்பட்ட இரு நகர்களாகும்.
B யிலிருந்து பார்க்கும் போது A யின் திசைகோள் $210^0$ எனின்,
A யிலிருந்து பார்க்கும்போது B யின் திசைகோள் யாது?




28) $\frac{a}{b} = \frac{2}{5}$ எனின், $\frac{a+b}{b}$ யின் பெறுமானத்தைக் காண்க

29) செங்கோண முக்கோணி ABC யில் ABC =90, ACB = ஆகும். சைன் $\theta = \frac{4}{\sqrt{41}}$ எனின், கோசை $\theta$ வைக் காண்க.

30) உருவில் நிழற்றப்பட்டுள்ள பிர தேசத்தை வகை குறிக்கும் சமனிலிகளை எழுதுக.



## பத்திரம் II

1.
(a) பாறினில் வேலைசெய்யும் ஒரு பெண்ணுக்குச் சம்பளமாக மாதம் 24 பாறின் தினார் கிடைத்தது.
i) ஒரு பாறின் தினார் 182 இலங்கை ரூபாய்க்குச் சமானமெனின், அப்பெண்ணின் சம்பளம் இலங்கை ரூபாயில் எவ்வளவு?
ii) பின்னர் பாறைன் தினாருக்குச் சமானமான இலங்கைப் பெறுமானம் 5% இனால் அதிகரிப்பின், அவர் மாதம் இலங்கை ரூபாயில் எவ்வளவு பணம் கூடுதலாகப் பெறுவார்?

b) ஒருவர் வங்கியிலிருந்து ரூ.45000 கடன் பெற்றார். அதற்காக வங்கி 20% ஆண்டு வட்டியை அறவிடும் அதேவேளை, முதலையும் வட்டியையும் 24 சம மாதத் தவணைக் கட்டணங்களில் கொடுத்து முடித்தல் வேண்டும்.
i) ஒரு மாதம் கொடுக்க வேண்டிய முதலின் பகுதி எவ்வளவு?
ii) அத்தொகைக்கான ஒரு மாதம் கொடுக்க வேண்டிய வட்டி எவ்வளவு?
iii) வட்டி கொடுக்கப்பட வேண்டிய மாத அலகுகளின் எண்ணிக்கையைக் காண்க.
iv) கொடுக்கப்பட வேண்டிய மொத்த வட்டி யாது?
v) திரும்பக் கொடுக்க வேண்டிய மொத்தத் தொகை யாது?
vi) ஒரு தவணைக் கட்டணத்திற்காகக் கொடுக்க வேண்டிய தொகை யாது?


02. a) காரணிகளைக் காண்க $a^2+3a-3-a$
b) பசு ஒன்றையும் இரு ஆட்டுக்குட்டிகளையும் ரூ.11250 இற்கு வாங்கலாம். அத்தகைய 7 ஆட்டுக் குட்டிகளை வாங்கச் செலவிடும் பணத்திற்கு அத்தகைய பசு ஒன்றை வாங்கலாம்.
i) பசுவின் விலையை ரூ.x எனவும் ஆட்டுக்குட்டி ஒன்றின் விலையை ரூ. y எனவும் கொண்டு மேற்குறித்த தகவல்களைப் பயன்படுத்தி இரு ஒருங்கமை சமன்பாடுகளை உருவாக்குக.
ii) பசுவின் விலையையும் ஆட்டுக்குட்டி ஒன்றின் விலையையும் காண்க.

c) தீர்க்க : $\frac{x}{2}+\frac{6}{x}=4$

03. a) சுருக்குக : $9\frac{2}{3} \times 8\frac{1}{3}$

b) x = மட$_{10}$ 8, y = மட$_{10}$, $\frac{9}{4}$ z = மட10 $\frac{9}{5}$ எனின், மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தாமல், (x+ y - z) இன் பெறுமானத்தைக் காண்க.

c) மடக்கை அட்டவணைகளைப் பயன்படுத்தி, $\frac{51.42 \times \sqrt{0.00945}}{(2.52)^2}$ இன் பெறுமானத்தை இரு தசம தானங்களுக்குத் திருத்தமாகக் காண்க.




4. A,B,C அகியவற்றினால் ஓர் அகிலத் தொடை $\in$ இன் மூன்று தொடைப்பிரிவுகள் குறிக்கப்படுகின்றன. $n(A)=35, n(B)=22, n(C)=12, n(A\cap B\cap C)=x$ $n(A\cap B)=13, n(B\cap C)=5, n(C\cap A)=6.$

i) தரப்பட்டுள்ள வெண்வரிப்படத்தை உமது விடைத்தாளில் பிரதி செய்து மேற்குறித்த தகவல்களை அதில் காட்டுக.

ii) x =2 எனின், $n(A\cup B\cup C)$ ஐக் காண்க.

iii) x = 2 ஆகவும் $n(\in)=50$ ஆகவும் இருப்பின் $n(A\cup B\cup C)$ ஐக் காண்க.

b) பெட்டி ஒன்றிலே ஒரே அளவுள்ள, ஒரே வகையான ஆறு பென்சில்கள் இருக்கின்றன: அவற்றில் இரு பென்சில்கள் சிவப்பு நிறத்தையும் எஞ்சிய நான்கு பென்சில்களும் நீலநிறத்தையும் உடையன. இப்பெட்டியிலிருந்து பென்சில் ஒன்றை எழுமாற்றாக வெளியே எடுத்து அதனை மறுபடியும் பெட்டிக்குள்ளே இடாமல் அதிலிருந்து வேறொரு பென்சில் எழுமாற்றாக வெளியே எடுக்கப்படுகின்றது.
i) இங்கு மாதிரிவெளியைத் தெக்காட்டுத் தளத்தில் வகை குறிக்க.

ii) வெளியே எடுக்கப்பட்ட பென்சில்கள் இரண்டும் சிவப்பு நிறப் பென்சில்களாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

iii) வெளியே எடுக்கப்பட்ட பென்சில்களில் ஒன்று சிவப்பு நிறப் பென்சிலாகவும் மற்றையது நீலநிறப் பென்சிலாகவும் பென்சில்களாக இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.

(தொடர்ச்சி.... திங்கட்கிழமை வெளிவரும்)

## கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை வெளியான புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்களின் விடை

### 06 யூலை 2014 ஞாயிற்றுக்கிழமை

1) அமெரிக்காவில் மிலான் நகரில்
2) வியாபாரி
3) புத்தகங்கள் வாசித்தல்
4) பெற்றோர்
5) மின்குமிழ்
6) 1847
7) பிறந்தார், பாடுபட்டனர், ஒளிர்ந்தது, படைத்தது
8) படித்து, ஒளிர்ந்து
9) விஞ்ஞானி, எடிசன், தந்தை
10) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் - முயற்சி திருவினையாக்கும்
11) மின்குமிழ்
12) அ) விருப்பம் ஆ) பிரகாசித்தது இ) வருடம்
ஈ) பரிசு, உபகாரம், பாராட்டு
13) அ) Country ஆ) Bulb, இ) Book, ஈ. Prize
14) அ) கரும்பலகை ஆ) அதிபர்

02) 1. நட்டமுண்டாதல் 2. நம்பிக்கைத் துரோகம் செய்தல்
3. விழித்தெழுதல் 4. இறத்தல்
5. நித்திரை செய்தல் 6. உற்றுக்கேட்டல், அவதானித்தல்.

03) 1. அந்த வீதியில் இரு பக்கங்களிலும் நிழல் மரங்கள் நின்றன.
2. சிவநந்தினி துணிப்பொம்மைகள் செய்வதைக் கூர்ந்து கவனித்தாள்.

04)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. - 1 | 2. - 2 | 3. - 1 | 4. - 3 | 5. - 2 |
| 6. - 2 | 7. - 3 | 8. - 3 | 9. - 3 | 10. -1 |
| 11. - 2 | 12. - 2 | 13. - 3 | 14. - 3 | 15. - 2 |

05) 1. சரி 2. பிழை 3. சரி 4. சரி 5. பிழை

06) 1. வீதி அபிவிருத்தி அதிகார சபை
2. தரக்கட்டுப்பாட்டுச் சபை
3. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
4. ஆந்தை 5. கிவி
6. மீன்கொத்தி 7. தீக்கோழி
8. சீவுளி - மரத்தின் மேற்பகுதியை அழுத்தமாக்குதல்
9. குறடு - ஆணிபிடுங்குதல், ஏதாவது ஒன்றை வெட்டுதல்.
10. நங்கூரம் - கப்பலை நிறுத்தி வைத்தல்.

07) 1. - 7 பேர் 2. 13 பேர் 3. 15 பேர்
4. 43 பேர் 5. 5 பேர் 6. 95 பேர்

08) 1. மஞ்சள் 2. 42 கம்பங்கள் 3. 36
4. 1/8 5. 6400

### 08 யூலை 2014 செவ்வாய்க்கிழமை

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 10) 3 | 19) 3 | 28) 2 |
| 2) 3 | 11) 2 | 20) 2 | 29) 2 |
| 3) 2 | 12) 2 | 21) 3 | 30) 1 |
| 4) 1 | 13) 2 | 22) 2 | 31) 2 |
| 5) 2 | 14) 3 | 23) 1 | 32) 1 |
| 6) 2 | 15) 3 | 24) 2 | 33) 2 |
| 7) 3 | 16) 3 | 25) 2 | |
| 8) 1 | 17) 3 | 26) 23 | |
| 9) 1 | 18) 2 | 27) 40 | |

# உயர்தர விஞ்ஞானப் பிரிவில் மாணவர் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## விக்னேஸ்வரன் கவலை

(அளவெட்டி)

வடமாகாணத்தில் கல்விப் பொதுத் தராதர உயர்தர விஞ்ஞானத்துறையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை வருடா வருடம் வீழ்ச்சி கண்டு வருவதாக வடமாகாண கல்வித் திணைக்களத்தின் முன்னாள் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் நிறுவுனர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் உரையாற்றுகையில்,

விஞ்ஞானத்துறையில் மாணவர்களைக் கற்பிக்க வைப்பதற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்று வடமாகாணக் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் எடுத்த முயற்சிகள் முழுமையாக வெற்றியளிக்கவில்லை. வெற்றியளிக்காமைக்கு பெற்றோர், மாணவர்களின் பூரண ஒத்துழைப்பு இல்லாமையே காரணமாக அமைந்துள்ளது.

விஞ்ஞானத்துறையில் கற்கும் மாணவர்களின் எதிர்காலம் மிகவும் பிரகாசமானதாக காணப்படுகின்றது. மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஏதோவொரு குறிப்பிட்ட துறையில் இரண்டு வருடங்கள் கல்வி கற்றாலே வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

அனைத்து பிள்ளைகளுக்கும் ஏதோவொரு திறமை காணப்படும். அதனை நாம் இனங்கண்டு வளர்த்தெடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இந்த வகையில் தான் இன்று கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அருணோதயக் கல்லூரி வீர, வீராங்கனைகள் தேசிய மட்டத்தில் பல விருதுகளைப் பெற்று முன்னிலையில் திகழ்வதுடன், கல்வியிலும் முன்னிலையில் காணப்படுகின்றனர் என்றார்.

## மின் விநியோகம் தடை

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை தோப்பு, அச்சுவேலி, செல்வநாயகபுரம், தம்பாலை, இடைக்காடு, பத்தமேனி, கைதடி வடக்கு, நவபுரம், நாவற்குழி, மறவன்புலோ, தச்சன்தோப்பு, தனங்கிளப்பு பிரதேசத்திலும்

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலை, விளான், நிச்சாமம், தொல்புரம், சுழிபுரம், சங்கானை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

## அனுமதியின்றி மணல் நால்வருக்கு தண்டம்

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரமொன்றில் மணல் கொண்டுசென்ற கெற்பேலியை சேர்ந்த 04 பேருக்கு தலா 50 ஆயிரம் ரூபா தண்டமாக சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதவான் சிறிநிதி நந்தசேகரம் விதித் த்தார்.

கெற்பேலி பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த 04 பேரையும் கொடிகாமம் பொலிஸார் கைதுசெய்தனர்.

இதனைத் தொடர்ந்து, இவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றத்தில் கொடிகாமம் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தனர்

இந்த வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இவர்கள் தங்களது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, நீதவான் இந்த தண்டத்தை விதித்தார்.

## முதலுதவிப் பயிற்சி

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் உத்தி யோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பயிற்சியில் வவுனியா வடக்கில் பணியாற்றும் கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



இதன்போது, அனர்த்தங்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு எவ்வாறான முதலுதவிகளை வழங்குவது என்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன், செயன்முறையும் முன்னெடுக்கப்பட்டது. வவுனியாவின் முதலுதவி வளவாளர் கே.ராஜசங்கர் பயிற்சிகளை வழங்கினார். இதில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

## அங்கீகாரமற்ற மருந்துப் பாவனை அவதானமாக இருக்கக் கோரிக்கை

போலியாத் தயாரிக்கப்பட்ட, இறக்குமதி செய்யப்பட்ட, உரிய முகவர்களினூடாக விநியோகிக்கப்படாத ஆயுர்வேத மருந்துகள் விநியோகத்தில் உள்ளதாக அங்கீகாரம் பெற்ற மருந்து விநியோக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பில் ஆயுர்வேத மருந்துகளை கொள்வனவு செய்யும் ஆயுர்வேத மருத்துவர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு தரத்தினை உறுதிப்படுத்தி கொள்வனவை மேற்கொள்வதுடன் இவ்விடயம் தொடர்பில் ஒவ்வொரு வைத்தியரும் அக்கறை கொள்ளும் போது மட்டுமே இப் போலிகளை இனங்காணமுடியும். எனவே ஒவ்வொருவரும் இவ்விடயம் தொடர்பில் தங்கள் மேலான கவனத்தைச் செலுத்தி தரமான சுதேச மருத்துவ சேவைகளை உறுதிப்படுத்துமாறு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# டொமினிக் ஜீவாவுக்கு இயல் விருது

கனடா தமிழ் இலக்கிய தோட்டம் வழங்கும் தமிழ் இலக்கிய வாழ்நாள் சாதனைக்கான இயல் விருது (2013) டொமினிக் ஜீவா அவர்களுக்கு அவருடைய 88 ஆவது பிறந்த நாளை யொட்டி சிறப்பு விருதாக வழங்கப்படுகிறது. இந்த விருது பரிசுக் கேடயமும், 2500 டொலர் பணப் பரிசும் கொண்டது. இவர் கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இந்த விருதைப் பெறும் 15 ஆவது ஆளுமை ஆவார்.

டொமினிக் ஜீவா 1927 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஜோசப் - மரியம்மா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார்.

இவரது தந்தையார் ஜோசப் ஒரு கலைப் பிரியர். நாட்டுக் கூத்தில் நாட்டமுடையவர். தாயார் மரியம்மாவோ அருவி வெட்டுக் காலங்களில் நாட்டுப்புறப் பாடல்களைப் பாடி, சக தொழிலாளர்களை மகிழ்வித்தவர்.

கலையில் ஈடுபாடு கொண்ட தாய் - தந்தையர்க்கு பிள்ளையாக பிறந்த ஜீவா, கலை இலக்கிய ஆளுமையின் ஊற்றுக்கண்ணை பெற்றோரிடமிருந்து பெற்றார். பின்னாளில் ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு சாதனையாளராக மிளிர்வதற்கான பின்புலம் இவருக்கு இப்படி அமைந்தது.

இலங்கையில் தலைமறைவு வாழ்வை மேற்கொண்டிருந்த தோழர் ப. ஜீவானந்தம் அவர்களை 1948 ஆம் ஆண்டு ஜீவா சந்தித்தார். அவரது பொதுவுடைமைக் கொள்கைகளால் கவரப்பட்டார். ஜீவானந்தம் மீதான அபிமானம் காரணமாக டொமினிக் என்ற தமது பெயரை "டொமினிக் ஜீவா" என மாற்றிக் கொண்டார்.

இவர் தமது அயராத உழைப்பின் மூலம் ஒட்டுமொத்த ஈழத் தமிழ்ச் சமூகத்திற்கும் பெருமை சேர்த்தார். ஒரு முழுநேர இலக்கியகாரனாக தமது வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்தார். ஈழத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் இடையிலான ஆரம்பகால இலக்கிய உறவுப் பாலமாக திகழ்ந்தவர்.

தமது இலக்கியப் பணிகளூடாக, தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வுடன் கூடிய, சகஜ நிலைமையை ஏற்படுத்தப் பாடுபட்டவர்.

டொமினிக் ஜீவா இதுவரை 5 சிறுகதை தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். அதில் "தண்ணீரும் கண்ணீரும்" தொகுப்பு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசை வென்றது. 5 கட்டுரைத் தொகுதிகளும் எழுதியிருக்கிறார். "மல்லிகை" எனும் இலக்கியச் சிற்றிதழும்,



"மல்லிகைப் பந்தல்" எனும் பதிப்பகமும், இளவயது முதல் அதீத நம்பிக்கையுடன் அவர் பின்பற்றிய அரசியல் மார்க்கமும் அரை நூற்றாண்டுக்கும் மேலாக அவரது பணிகளுக்கான விதைநிலங்களாக இருந்து வந்துள்ளன.

சிறந்த எழுத்தாளராகவும், சிற்றிதழ் வரலாற்றின் முன்னோடிச் சாதனையாளராகவும் கடந்த 48 ஆண்டுகளுக்கு மேலாக தமிழுக்கு தன்னை அர்ப்பணித்து ஆற்றிய சேவைக்காக டொமினிக் ஜீவா அவர்களுக்கு வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனைக்கான இயல் விருது (2013) 17 ஜுலை 2014 அன்று மாலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வழங்கப்படுகிறது. என கனடிய தமிழ் இலக்கிய தோட்டத்தினர் தெரிவித்துள்ளனர்.

# சந்திரபாபு நாயுடு மீது ஜெகன் மோகன் புகார்



ஆந்திராவில் சமீபத்தில் நடந்த ஜில்லா பரிஷத், மண்டல பரிஷத தலைவர் தேர்தலில் வன்முறைகள் இடம்பெற்றன.

வை.எஸ்.ஆர்.காங்கிரஸ் கட்சி கவுன்சிலர்களைக் கடத்தி வந்து தங்கள் வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்ததாக தெலுங்கு தேசம் கட்சியினர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

சில இடங்களில் இரு தரப்பினருக்கும் இடையே நடந்த மோதலைத் தடுக்க பொலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள்.

இந்த முறைகேடு செயலில் ஈடுபட முதல் மந்திரி சந்திரபாபு நாயுடு தனது கட்சிக்காரர்களுக்கு உத்தரவிடுவதாகவும், இதற்கு அதிகாரிகளும் உடந்தையாக இருந்ததாகவும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன் மோகன் ரெட்டி ஆளுநர் நரசிம்மனை சந்தித்து புகார் மனு கொடுத்தார்.

இந்த நிலையில் டெல்லி சென்ற ஜெகதிரி ராஜ்நாத் சிங் ஆகியோரை சந்தித்து புகார் மனு வழங்கினார்.

உள்ளாட்சி தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சியினர் நடத்திய வன்முறை காட்சிகளை வீடியோ மூலம் அவர்களிடம் காட்டி விளககியதோடு சந்திரபாபு நாயுடு அராஜக ஆட்சி நடத்துகிறார் என றும், ஜனநாயகத்தைக்காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

உள்ளாட்சி தலைவர் தேர்தலில் மிரட்டல், கடத்தல் போன்ற செயலில் ஈடுபடுவதால் மாநிலத்தில் வரவிருக்கும் இடைத் தேர்தலை சந்திக்க முடியாது என்று விளக்கியுள்ளதோடு தொடர்ந்து டெல்லியில் தங்கியிருக்கும் ஜெகன் மோகன் ரெட்டி பிரதமர் நரேந்திர மோடி, நிதி மந்திரி அருண் ஜெட்லி ஆகியோரையும் சந்தித்து பேச உள்ளதாகவும் தெரிவித்தார்.

# காசா மீதான தாக்குதலில் 74 பலஸ்தீனர்கள் பலி



இஸ்ரேல் இராணுவத்திற்கும், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளுக்குமிடையே நேற்று இடம்பெற்ற மேதலில் 750 இடங்களில் இஸ்ரேல் இராணுவம் விமானங்கள் மூலம் குண்டுகளை வீசி தாக்கியது. இதில், 74 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு தரப்பினரும் ராக்கெட் மற்றும் விமான தாக்குதலில் ஈடுபட்டுள்ளதால் ஏராளமானோர் கொல்லப்பட்டு வருவதாகவும் தீவிரவாதிகளின் நிலைகளை குறிவைத்து இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் விமான தாக்குதலுக்கு பொதுமக்கள் குழந்தைகள் உட்பட பலர் பலியாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் 4 வயதான சிறுமி ஒருவரும், 5 வயத[illegible] சிறுவன் ஒருவனும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அப்பாவி பொதுமக்கள் என்றும் தெரிய வந்துள்ளது.

மறுபுறம் இஸ்ரேலின் இந்த கடுமையான தாக்குதலுக்கு போட்டியாக அந்நாட்டின் முக்கிய நகரான டெல் அவிவ் மீது ஏவ[illegible]ணைகளை வீச ஹமாஸ் இயக்கத்தினர் தயாராகி வருவதாக பாலஸ்தீனிய தரப்பு தெரிவித்துள்ளது.

# பேருந்து கால்வாயில் விழுந்ததில் சீனாவில் 11பேர் உயிரிழப்பு



உலகச் செய்திகள்

சீனாவின் தெற்கு ஹுனான் மாகாணத்தில் ஸியாங்டன் பகுதியில் இருந்து குழந்தைகளை ஏற்றிச் சென்ற பேருந்து மலைப் பகுதியில் சென்றபோது கட்டுப்பாட்டை இழந்து வீதியோரம் உள்ள கால்வாயில் வீழ்ந்துள்ள்தாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் 8 பாடசாலைக் குழந்தைகள், 2 ஆசிரியர்கள், பேருந்து சாரதி என 11 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இந்தியாவுடன் காஷ்மீர் இணைய பாகிஸ்தான் எதிர்ப்புத் தெரிவிப்பு



இந்தியாவுடன் காஷ்மீர் இணைவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையின் சாசனத்திற்கு அமைய காஷ்மீர் விவகாரம் தற்போதும் தீர்க்கப்பட வேண்டிய ஓர் பிரச்சினையாக உள்ளதாக பாகிஸ்தான் கூறியுள்ளது.

புதுடில்லியிலுள்ள இந்திய மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் இராணுவக் கணகாணிப்பாளர்களை வெளியேறுமாறு இந்தியா அறிவித்துள்ளது.

இந்தியாவின் இந்த தீர்மானம் குறித்து பதிலளித்த பாகிஸதான் வெளிவிவகார அமைச்சின் பேச்சர்ளர் காஷ்மீர் பிரச்சினை தொடர்பான சட்ட அந்தஸ்தில் இந்த நகர்வு எந்தவொரு தாக்கத்தையும் செலுத்தாது எனக் கூறியுள்ளார்.

ஐ.நா இராணுவ கண்காணிப்பாளர்களின் பங்களிப்பு சிம்லா உடன்படிக்கை மற்றும் அது சார்ந்து நிறுவப்பட்ட எல்லைக் கட்டுப்பாட்டு கோடு என்பவற்றுக்கு அப்பாற்பட்டதென இந்தியா குறிப்பிட்டுள்ளது.

ஜம்மு - காஷ்மீர் பகுதியிலுள்ள யுத்த நிறுத்த எல்லைப் பகுதியில் 1949 ஆம் ஆண்டு முதல் ஐநா இராணுவ கண்காணிப்பாளர்கள் நிலைகொண்டிருந்தனர். இரண்டு நாடுகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்ததை அவர்கள் மேற்பார்வை செய்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் கோர்டன் இனத்தவர்கள் ஐ.எஸ்.எஸ். அமைப்புடன் இணைவு



ஈராக்கில் வாழும் கோர்டன் இனத்தவர்கள் இஸ்லாமிய தேசமென அழைக்கப்படும் ஐ.எஸ் தீவிரவாத இயக்கத்துடன் இணைந்துள்ளதாக, ஈராக் முதன் மந்திரி நூரி அல் மாலிகி தொலைக் காட்சி ஒன்றில் தெரிவித்துள்ளதுடன் ஈராக்கின் ஒற்றுமையை இவர்கள் சிதைக்க முயல்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். ஈராக் நாட்டின் ஒருமைப் பாட்டைப் பேண, கோர்டன் இனத்தவர்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு எதிராக, பக்தாத் அரசு பயங்கரப் போரை நடாத்து[illegible]னவும் கூறியுள்ளார். வட ஈராகசில் வாழும் கோர்டன் இனத்தவர்கள் ஏற்கனவே தம் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து, வட ஈராக்கில் பொது ஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்துவருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈராக்கின் வீழ்ச்சிக்குஹட் இனத்தின் தனி ஆதிக்க பக்தாத் அரசுகாரணமாக அமையுமென்றும், இதைத் தவிர்க்க மாலிகி ராஜினாமா செய்து கொள்ள வேண்டுமென்றும், கோர்டன் இன தனியாட்சிப் பிரதேச ஜனாதிபதி, மசட் ப(டி)ர்சானி ஏற்கனவே கூறியுள்ளமை நினைவு கூரப்பட்டுள்ளது. இதே வேளை, ஈராக்கில் வாழும் கிறிஸ்தவர்கள் ஐரோப்பிய ஒன்றிய அமைப்பிடம் உதவி கோரியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.-

துருக்கி அரசு, ஸ்லாமிய தேசத் தீவிரவாத இயக்கத்தை ஆதரிப்பதாகவும், துருக்கியிலும் ஸ்லாமிய தேசத்தை அமைக்க ஐ.எஸ். இயக்கம் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐ.எஸ். தீவிரவாதிகள், துருக்கி அரசிற்கு எதிராக மாறும் சாத்தியம் ஏற்படலாமென அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றிய அமைப்பும் எச்சரித்தும், துருக்கி அரசு அதனை அலட்சியம் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாமிய தேசம் வளர்ந்து, இஸ்ரேல் எல்லை வரை ஆதிக்கத்தைச் செலுத்தக்கூடிய நிலை ஏற்படும் பட்சத்தில் ஐரோப்பாவினதும் இஸ்ரேலினதும் அமைதியை உறுதி செய்யமுடியாத நிலை தோன்றலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது

# மருந்துகள், எரிபொருள் பற்றாக்குறை காசா மக்கள் ஆபத்தான நிலையில்

சாகா பகுதியில் செயற்பட்டுவரும் மருத்துவமனைகள் மருந்துகள் பற்றாக்குறையாலும், எரிபொருள் பற்றாக்குறையாலும் அவதிப்பட்டு வருவதாக உலக சுகாதாரக் கழகம் நேற்றுமுன்தினம் எச்சரித்துள்ளது. சமீபத்தில் அதிகரித்துவரும் வன்முறையினால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனிய எல்லைப்பகுதியில் அதிகரித்து வரும் மருத்துவ தேவைகளைச் சமர்ளிக்க முடியாமல் சுகாதார அமைச்சகமும், அரசு நிர்வாகமும் தடுமாறி வருகின்றன என்று டபிள்யுஎச்ஓ குறிப்பிட்டுள்ளது.

இதுபோன்ற நிலைமை கடந்த 2008-2009-ம் ஆண்டுகளிலும், 2012-ம் ஆண்டிலும் காசாவில் ஏற்பட்டதாக கூறும் டபிள்யுஎச்ஓ பிராந்திய இயக்குனரான டாக்டர் அலா அல்வன் தற்போது வெஸ்ட் பாங்க் பகுதியும் இதுபோன்ற நெருக்கடியில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கின்றார்.

மத்திய கிழக்கு நாடான இஸ்ரேல் மேற்கொண்ட வெஸ்ட் பாங்க் குடியிருப்பு விரிவாக்கம் மற்றும் கிழக்கு ஜெருசலேம் ஆக்கிரமிப்பு தொடர்பாக அண்டை நாடான பாலஸ்தீனத்துடன் ஏற்கனவே பிரச்சினைகள் தொடர்ந்து வந்துள்ளன.

இருதரப்பினருக்கும் சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்காவும் விடாது முயன்று வருகின்றது. இந்த நிலையில் சென்ற மாதம் இஸ்ரேலிய இளைஞர்கள் மூன்று பேர் கடத்திக்கொலை செய்யப்பட்டது தொடர்பாகவும் அதனைத் தொடர்ந்த பாலஸ்தீனிய இளைஞன் ஒருவனது மரணமும் இரு நாடுகளுக்கிடையே மீண்டும் மோதல்களைத் ஆரம்பித்துள்ளன.

# கடற்றொழில் சங்கங்களின் பிரச்சினைகள்

## வடமராட்சியில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கிலுள்ள 14 கடற்றொழிலாளர் சங்கங்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை கண்டறியும் முகமான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது. சுப்பர்மடப் பகுதியில் இக்கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கற்கோவளம் முதல் தொண்டைமானாறு வரையிலான வடமராட்சி வடக்கைச் சேர்ந்த 14 சங்கங்கள் எதிர்நோக்கி வரும் தொழிற்துறை நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

அத்துடன் வலிகாமம் வடக்கு இடம்பெயர்ந்தோர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டன. இதில் தொழிற்துறை பாதிப்பு தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கருத்துரைகளை ஆற்றியிருந்தனர்.

இதன்போது பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன், மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் கணேசமூர்த்தி உள்ளிட்ட துறை சார்ந்த பலரும் உடனிருந்தனர்.

## ரணில் சந்திப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பிற்பகல் சர்வமத தலைவர்கள் மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் சந்திப்புக்களை மேற்கொண்டார்.

நாரஹேன்பிட்டி அபயாராம விகாரையில் வைத்தே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில், கார்தினால் மல்கம் ரஞ்சித் பங்கேற்றிருந்தமை விசேட அம்சமாகும்.

## மயிலிட்டி...

பின்னர் அவர்களின் தேசிய அடையாள அட்டைகள் மற்றும் விவரங்களைப் பதிவு செய்த இராணுவத்தினர் தமது பஸ் வண்டிகளில் அந்தப் பொது மக்களை ஆலயங்களுக்கு ஏற்றிச்சென்றனர்.

அந்த ஆலயங்களின் சுற்றாடலில் பொது மக்களின் நன்மை கருதி தாகசாந்தி தீர்ப்பதற்கு பந்தல் அமைத்து குளிர்பானங்கள், பிஸ்கட் வகைகள் என்பன வழங்கப்பட்டன. ஆலயங்களின் சுற்றாடல் துப்புரவு செய்யப்பட்டு அழகுபடுத்தப்பட்டு இருந்தன. சேதமடையாத கட்டடங்கள் வர்ணம் பூசப்பட்டிருந்தன. வழிபாட்டுக்குச் சென்ற மக்கள் தங்குவதற்கு வசதியாக கூடாரங்கள் அமைக்கப்பட்டு கதிரைகளும் போடப்பட்டிருந்தன. கோயில் பூசை நிறைவு பெற்று திரும்பிய பக்தர்களுக்கு உணவுப் பார்சல்களும் வழங்கப்பட்டன. மயிலிட்டி கண்ணகை அம்மன் கோயில், முருகன் கோயில், தோப்புப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றுக்கே நேற்று பக்தர்கள் அனுமதிக்கப்பட்டனர். (25)

## டில்லியில்...

நாடுகளுக்கும் இடையே நடைபெறுகின்ற இரண்டாவது உயர் ... இது என்பது குறிப்பிடத்தக்கது.

...ண்டு மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பில் இந்திய ...ள் விவகாரம், இலங்கை உள்நாட்டு போரில் பாதிப்படைந்த ...ளுக்கு மறுவாழ்வு அளித்தல் மற்றும் இருநாட்டு வர்த்தக உறவுகள் உள்ளிட்ட பல முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாக இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியாவுக்கு இந்த ஆண்டில் மூன்றாவது தடவையாக இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் வந்துள்ளமை இருநாட்டுக்கு இடையேயான உறவுகள் வலிமை பெற்றுவருவதை காட்டுவதாக இந்திய வெளியுறவுத்துறையின் பேச்சாளர் சையத் அக்பருதீன் கூறினார்.

உள்நாட்டு போருக்கு பிறகு அந்நாட்டின் அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள், வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதம் அளித்தல் போன்ற விவகாரங்கள் குறித்தும் பேசப்பட்டது. இந்திய அரசு இலங்கையில் செயல்படுத்திவரும் சிறப்பு திட்டங்கள் குறித்தும் விரிவாக பேசப்பட்டன என்றார் சையத் அக்பருதீன்.

ஆந்திர மாநில முதல்வர் சந்திரபாபு நாயுடு மற்றும் ஜீ.எல். பீரிஸ் இடையில் நேற்று ஹைதராபாத்தில் நடந்த பேச்சுவார்த்தையின் போது, இலங்கை, ஆந்திராவில் செய்துள்ள முதலீடு குறித்து ஆராயப்பட்டுள்ளது.

சுமார் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான இலங்கையின் இந்த முதலீட்டின் மூலம், 38,500 இந்தியர்கள் வேலை வாய்ப்பு பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்குழு மேற்கொள்ளவுள்ள நடவடிக்கை குறித்தும் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டதா என்றும் இந்த விவகாரத்தில் இந்திய அரச தரப்பின் நிலைப்பாடு என்ன என்பது குறித்தும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

ஐ.நா. மனித உரிமைகள் விசாரணைக்குழுவை அமைக்கும் விவகாரத்தில் இந்தியா ஏற்கனவே தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறது. குறிப்பிட்ட அந்தப் பிரிவை எதிர்த்து வாக்களித்தது. அந்த நிலைப்பாட்டை இந்திய அரசு மாற்றவில்லை. அதே நிலைப்பாடே தொடர்கிறது என்று பதிலளித்தார் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் பேச்சாளர் சையத் அக்பருதீன்.

## வடக்கு...

பணியாற்றிய காலத்தில் முகமாலை பாதுகாப்பு வலயத்துக்கு புலிகள் தாக்குதல் நடத்தியதால் ஏ-9 வீதியை மூடவேண்டிய நிலை ஏற்பட்டபோது அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆளுநர் சந்திரசிறி அளப்பரிய சேவைகள் செய்தார்.

அதன் பின்னர் மனிதாபிமான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோது நிர்க்கதிக்குள்ளான சுமார் 3 இலட்சம் தமிழ் மக்கள் வவுனியாவுக்கு வந்தபோது அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தெரிவுக்குழுவின்...

மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். யோகராஜன் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே சர்வகட்சி குழு ஒன்று அமைத்து தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டம் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதேபோன்றுதான் இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் காலமும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

இது சர்வதேச நாடுகளை ஏமாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சியே தவிர வேறொன்றும் இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். நகரில்...

13 கோடி இலங்கை ரூபா பெறுமதியான இந்த அமெரிக்க டொலர் நாணயத்தாள்கள் போலியானவை என்பதை உறுதி செய்ய நீதிமன்ற உத்தரவு பெறபட்டு மத்திய வங்கியூடாக இந் நாணயத்தாள்கள் அமெரிக்க உயர்ஸ்தானிகரகத்தின் உதவியுடன் பரிசோதனைக்காக அனுப்பப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இந்நாணயத் தாள்களை வைத்திருந்த 4 பேரும் விசாரணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## நயினையில்...

16 நாள்கள் தொடர்ந்து நடைபெற்ற திருவிழாவில் நேற்று தேர்த்திருவிழா நடைபெற்றது. இன்று தீர்த்தத் திருவிழா இடம்பெறும். தேர்த்திருவிழாவில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு அம்பாளின் அருளாசியைப் பெற்றனர்.

நாட்டின் பலபகுதிகளிலிருந்தும் நயினை நாகபூஷணி அம்மனைத் தரிசிக்க அடியார்கள் திரண்டிருந்தனர். பக்தர்களின் போக்குவரத்து வசதி கருதி இ.போ.ச. விசேட பஸ்சேவைகளை நடத்தியது. அத்துடன் விசேட படகுச் சேவையும் இடம்பெற்றது.

# மோசடிப் பேர்வழிகள் யாழ்ப்பாணத்தில் அதிகம்

## யாழ். பொலிஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை

வட்டிக்கு பணம் கொடுத்தல், சீட்டுக் கட்டுதல், அவுஸ்ரேலியா போன்ற வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூறுவோருக்கு பணம் கொடுத்தல், ஈசிகாஸ் தொலைபேசி அழைப்பு, காசோலை வழங்கல் போன்ற மோசடிகள் அதிகளவில் இடம்பெறுவதால் இவ்வாறான விடயங்களில் மக்களை விழிப்பாக செயற்படுமாறு யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ. டி.விமலசேன தெரிவித்தார்.

சட்டவிரோதமாக இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோர் மக்களை வசப்படுத்தி ஏமாற்றுகின்றனர். வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகக் கூறி பணமோசடி செய்கின்றனர்.

அரச சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட முகவர்களின் ஊடாக வெளிநாட்டுக்கு செல்வதை விட்டு இவ்வாறான நபர்களின் பொய் வாக்குறுதி நம்பி ஏமாறாதீர்கள். அதிகளவிலானோர் இவ்வாறான முறைப்பாடுகளையே கொண்டு பொலிஸ் நிலையம் வருகின்றனர்.

எனவே இவ்வாறான சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகளில் ஈடுபடாது விழிப்பாக இருக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# "திவிநெகும" திட்டத்தின் இலக்குகள் எவை?

## அறிந்துகொள்ள உலக உணவு விவசாய அமைப்பு ஆர்வம்



வாழ்வின் எழுச்சி (திவிநெகும) திட்டத்தின் இலக்குகள் குறித்து அறிந்து கொள்வதில் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பு அதிக ஆர்வம் காட்டியுள்ளது.

உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் உதவிப் பணிப்பாளர் நாயகமும் ஆசிய பசுபிக் வலய பிரதிநிதியுமான ஹியோஷிகி கொனுமா நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை சந்தித்தார். பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் திவிநெகும உட்பட ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து அமைச்சர் பசில் ராஜபக்ஷ இச்சந்திப்பின் போது, உலக உணவு அமைப்பின் உதவிப் பணிப்பாளர் நாயகத்துக்கு விளக்கமளித்தார்.

## இந்திய...

அவர்களை விடுதலை செய்யுமாறு நீதிபதி ஆனந்தி கனகரெட்ணம் உத்தரவிட்டார்.

எனினும் அவர்கள் பயன்படுத்திய 7 படகுகள் மற்றும் வலைகள் என்பன நீதிமன்றின் உத்தரவிற்கமைவாக பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி விசாராணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. விடுதலையான மீனவர்களை இந்தியாவுக்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை இந்திய துணைத் தூதரக அதிகாரிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

## ஜனாதிபதி...

பகுதியை அந்தக் காலப்பகுதியில் நிர்வாகம் செய்து கொண்டிருந்தது இராணுவமா? விடுதலைப் புலிகளா? என்று கேட்டபோது, சாட்சியமளித்த அந்தப் பெண்மணி, அந்தப் பகுதியை ஈ.பி.டி.பி. யினரே கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் என்று கூறியதாக செய்திகள் வெளியாகி இருந்தது.

அச்செய்தி உண்மையாயின் அக்கூற்றின் உண்மைத்தன்மையை வெளிக் கொணர்வதற்கு அச்சாட்சியினை குறுக்கு விசாரணை செய்ய எனது சட்டத்தரணிகளுக்கு சந்தர்ப்பம் வழங்க முடியுமா? என்பதை எமக்கு அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விசாரணைக்குழுவுக்கு கோரிக்கை விடுத்து கடிதம் எழுதியுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில் ஈ.பி.டி.பி அரசியல் விவகாரங்களில் செயற்படும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகும். எமது கட்சி எக்காலத்திலும், எந்தப்பிரதேசத்தையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவில்லை. ஆகையினால் அந்த சாட்சியினால் (08.07.2014) அன்று கூறப்பட்ட வாக்கு மூலமானது உண்மைக்குப் புறம்பானதாகும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# 16 வர்த்தகர்களுக்கு தண்டம் விதிப்பு

யாழ். மாவட்டத்தின் மல்லாகம் மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய நீதிமன்றங்களுக்குட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 16 வர்த்தகர்களுக்கு 52 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினர் நேற்று தெரிவித்தனர்.

பாவனையாளர்கள் அதிகார சபை அதிகாரிகளினால், இம் மாதம் 1 ஆம் திகதியிலிருந்து 10 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையில், காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, பொருட்களின் விலைகளைக் காட்சிப்படுத்தாமை மற்றும் நிறைகுறைந்த பாண் விற்பனை செய்தமை போன்ற குற்றங்கள் தொடர்பாக 16 வர்த்தகர்கள் பிடிக்கப்பட்டனர்.

தொடர்ந்து பிடிக்கப்பட்டவர்த்தகர்களுக்கு எதிராக அந்தந்த நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது, வர்த்தகர்கள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டமையால், நீதிமன்றங்களினால் அவர்களுக்கு தண்டம் விதிக்கப்பட்டதாக பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையினர் மேலும் தெரிவித்தனர்

# சுப்பர்மடத்தில் இறங்குதுறை அகழ்வுப்பணி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு சுப்பர்மடம் கடற்கரையில் இறங்குதுறையை அமைப்பதற்கான அகழ்வுப் பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

சுப்பர்மடம் கடற்கரைப் பகுதியில் இவ் ஆரம்பப் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

சுப்பர்மடத்துக்கென இறங்குதுறை இல்லாத நிலையில் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் தமது படகுகளைத் தரித்து வைப்பதற்குப் பல்வேறுபட்ட இடர்பாடுகளை எதிர்கொண்டிருந்தனர். இவ்விடயம் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கடற்றொழிலாளர்கள் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்து அமைச்சரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக இவ் இறங்குதுறை நிர்மாணிக்கப்படவுள்ளது. அப்பகுதி மக்களின் நிதிப் பங்களிப்புடன் மேற்படி செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து இறங்குதுறையை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன் அதனை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்த அமைச்சருக்கு அப்பகுதி கடற்றொழிலாளர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்தனர்.

இதன்போது பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளர் சிறிரங்கேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.

# மோட்டார் வாகன குற்றச்செயல்களுக்கு இனிமேல் மன்னிப்பு இல்லை

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகனப் போக்குவரத்தின் போது இடம்பெறும் குற்றச்செயல்களுக்கு இனிமேல் மன்னிப்பு வழங்கப்படாது. சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்படும் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.விமலசேன தெரிவித்தார்.

நாம் 3 வருடங்களுக்கு மேலாக மோட்டார் போக்குவரத்தின் போது வாகனங்களாலும் சரி, மோட்டார் சைக்கிள்களானாலும் சரி சிறு சிறு குற்றச் செயல்களுக்கு எச்சரிக்கை செய்து விடுவித்தோம். ஆனால் இன்று முதல் அவ்வாறு மன்னிப்பு வழங்காது உடனடியாகவே சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் வழக்குப் பதிவும் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்களுக்கும் வாகனப் பாவனை பெருமளவில் உதவுகின்றன.

எனவே அவற்றைத் தடுக்க யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவினரும் இன்று முதல் கடுமையான போக்குவரத்து விதிமுறைகளைக் கண்காணிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வீதி ஒழுங்கு விதிகள்; மாணவர்களுக்கு பயிற்சி

போக்குவரத்துப் பொலிஸ் தலைமையகத்தின் ஏற்பாட்டில் வீதி போக்குவரத்து விதிமுறை தொடர்பான பயிற்சிப் பட்டறை நிகழ்வு நேற்று வவுனியா நகரில் இடம்பெற்றது. வவுனியாவின் ஒன்பது பாடசாலைகளைச் சேர்ந்த 500 மாணவர்களுக்கு இந்தப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது. முன்னதாக வீதிக் குறியீடுகள், சமிக்ஞைகள், போக்குவரத்து விதிகள் தொடர்பாக வவுனியா நகரசபைக் கலாசார மண்டபத்தில் விளக்கமளிப்பு செயலமர்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து வவுனியா நகரில் கண்டி வீதியில், விபத்துக்களைத் தடுப்பதற்கான வழிமுறைகள் பற்றிய செயன்மறை விளக்கங்களும் பொலிஸாரால் வழங்கப்பட்டன. இதில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர, வவுனியா, மன்னார் பிரதிப் பொலிஸ் மா அதிபர் யூ.கே. திஸாநாயக்கா, வவுனியா பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை அகதிகள் நால்வர் தமிழகத்தில் கைது

தன்னியக்க பண இயந்திரங்களில் போலி அட்டைகளை பயன்படுத்தி பணம் பெற்றதாக கூறப்படும் இலங்கை அகதிகள் நால்வரை பலலூரித்தி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தமிழ்நாடு, திருச்சியிலுள்ள அகதிகள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டோரிடமிருந்து 372 போலி அட்டைகள், மடிக்கணினியொன்று, அட்டை படிப்பான், அட்டை தேய்க்கும் இயந்திரம், 14 இலட்சம் ரூபாய் பணத்தை பதுக்கி வைத்திருந்த கார் ஒன்றினையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இவர்கள், 1996ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து அகதிகளாக திருச்சிக்கு வந்ததாகவும் லண்டன் மற்றும் ஜேர்மனியிலுள்ள ஹோட்டல்களில் தொழில் புரியும் ஐரோப்பியர்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகவும் நகர பொலிஸ் ஆணையாளர் கே.ஜி. ஜெம்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பலலூரித்தி பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

# வடக்கு மக்களுக்கு பயனுறுதிமிக்க சேவையை வழங்க வேண்டும்

## செயலாளர்கள் நியமிப்பு வைபவத்தில் ஆளுநர் உரை

(யாழ்ப்பாணம்)

மக்களுக்கு பயனுள்ள சேவைகளை வழங்கக் கூடிய ஒரே நிறுவனம் உள்ளூராட்சிச் சபை. இந்தச் சபைகளுக்கு நீங்கள் பொறுப்பு வாய்ந்த செயலாளர்களாகத் தெரிவு செய்யப்படுகின்றீர்கள்.

எனவே நிதிப்பிரமாணம், தாபன விதிக்கோவை மற்றும் சுற்றுநிருபங்களுக்கு ஏற்ப வடக்கு மக்களுக்கான உயர்ந்த சேவையை வழங்குங்கள்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் கே. தெய்வேந்திரம் தலைமையில் வடமாகாணத்தில் உள்ள 5 உள்ளூராட்சி சபைகளுக்கு செயலாளர்கள் நியமனம் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி இவ்வாறு தெரிவித்தார்.

வடமாகாணத்தில் உள்ள மக்கள் பயனுள்ள சேவையை உங்களுக்கு ஊடாக அடையப்பட்டு சுபீட்சம் அடைய வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில், பச்சிளைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளராக செ.ரமேஷ், சுன்னாகம் பிரதேசசபை செயலாளராக ரி.தியாகசந்திரன், நெடுங்கேணி பிரதேச செயலாளராக பி.பிரபாகரன், துணுக்காய் பிரதேச சபை செயலாளராக ஏ.சத்தியநாதன், மாந்தை கிழக்கு பிரதேசசபை செயலாளராக எம். கிருஷ்ணராஜ் ஆகியோருக்கு வடமாகாண ஆளுநர் ஒவ்வொருவராக வாழ்த்தி நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், பிரதி பிரதம செயலாளர் செல்வி.ஆர்.எஸ்.துரைராஜா, வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் கே. தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முதலுதவிப் பயிற்சி

(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டது. அனர்த்த முகாமைத்துவ நிலையத் தின் வவுனியா அலுவலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்பயிற்சியில் வவுனியா வடக்கில் பணியாற்றும் கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, அனர்த்தங்களில் பாதிக்கப்படுபவர்களுக்கு எவ்வாறான முதலுதவிகளை வழங்குவது என்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன், செயன்முறையும் முன்னெடுக்கப்பட்டது.

# சிகரெட் பெட்டியில் எச்சரிக்கை வாசகம்

## இனி அறுபது வீதம்

(கொழும்பு)

2015 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் சிகரெட் பெட்டிகளில் 60 வீதம் படங்களுடன் கூடிய எச்சரிக்கை அறிவித்தல்கள் காணப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை கவனத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதியரசர் மொஹான் பீரிஸ்,ரோஹினி மாரசிங்க, சிசிர டி சில்வா ஆப்ரூ உள்ளிட்ட நீதிபதிகள் குழாத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிகரட் விநியோகம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர் நீதிமன்றத்தினால் இன்று கவனத்திற்கொள்ளப்பட்டது.

அத்துடன் எச்சரிக்கை படங்களற்ற சிகரட்பெட்டிகளை 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதிக்குள் சந்தையிலிருந்து அகற்றுவதற்கு மனுதாரர்கள் இணங்கியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இந்த மனு மீதான விசாரணை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

படங்களுடன் கூடிய எச்சரிக்கை சிகரெட் பெட்டிகளில் 60 வீதத்திற்குள் உள்ளடக்கப்பட வேண்டும் என நீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது.

## கொடிகாமத்தில் நேற்று விபரீதம்



இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.